

Registered as a Newspaper

விலை: 30/=

# உதயன்

சுடர் : 37 கதிர் : 41 | வியாழக்கிழமை 06 ஜனவரி 2022 | மார்கழி 22 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16

# சூடான் மக்களைப்போன்று புரட்சியில் இறங்குங்கள்!!!

## மக்களுக்கு ஜே.வி.பி. அழைப்பு

கொழும்பு, ஜனவரி 6

பொதுமக்கள் வீதியில் இறங்கிப் போராடியமையால்தான் சூடான் பிரதமர் பதவி விலகினார். இலங்கையிலும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பொதுமக்கள் வீதியில் இறங்கவேண்டும். அதற்கான நடவடிக்கையில் இறங்குவதற்கு நாமும் தயாராகவே இருக்கின்றோம். மக்களை வதைக்கும் ஆட்சியை விரட்டியடிப்பது ஜனநாயக விரோதச் செயலாக அமையாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அறைகூவல் விடுத்துள்ளார். 15




## மலேரியாவைப் பரப்பும் நுளம்பு யாழ். நகரிலும்!

மக்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ்ப்பாண நகரப் பகுதியில் அனோபிலிஸ் டிபென்சி எனும் மலேரியா அல்லது நகர்ப்புற மலேரியாவை பரப்பக்கூடிய ஒரு 15



படகின் சுக்கான் உடைந்ததால்

## நடுக்கடலில் தத்தளித்த நெடுந்தீவுப் பயணிகள்!

யாழ்ப்பாணம், ஜன. 6

100 பயணிகளுடன் நெடுந்தீவிலிருந்து நேற்று புறப்பட்ட சமுத்திராதேவி படகு சுமார் 3 கிலோமீற்றர் தூரம் சென்றநிலையில், பழுதடைந்ததால், பயணிகளுடன் நடுக்கட லில் தத்தளித்தது. பின்னர், வடதார 08

## கடும் எதிர்ப்பால் நிறுத்தப்பட்டது பட்டத்திருவிழா!

யாழ்ப்பாணம், ஜன. 6

வல்வெட்டித்துறையில் இந்த முறை பட்டத்திருவிழாவுக்கு நாமல் ராஜபக் 08

## 400 கிலோ குண்டுகளை கடத்திய 6பேர் கைது

முல்லைத்தீவு, ஜன. 6

400 கிலோகிராம் நிறையுடைய இரண்டு விமானக் குண்டுகளை, இரும்புக்காகக் கடத்திச் சென்றனர் என்ற குற் 08



## புலனாய்வுத் தகவலாலேயே சுசில் நீக்கப்பட்டாராம்

கொழும்பு, ஜன. 6

"புலனாய்வுப் பிரிவு வழங்கிய அறிக்கையை அடிப்படையாகக்கொண்டே இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து சுசில் பிரேமஜயந்த நீக் 15

## மஹிந்தவை ஓரம்கட்டவே பதவி நீக்கப்பட்டார் சுசில்!

ஐ.ம.ச. தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 6

"பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் தீவிர விசுவாசியாக சுசில் பிரேமஜயந்த இருக்கின்றார். அரசிலிருந்து மஹிந்தவை ஓரங்கட்டவே அவரின் சகாவான சுசில் பிரேமஜயந்தவின், கல்வி இராஜாங்க அமைச்சுப் பதவி ஜனாதிபதி 15

## ஆரியகுளம் புனரமைப்பில் சமய உரிமை மீறலா?

ஆளுநரின் கடிதத்தால் சர்ச்சை

யாழ்ப்பாணம், ஜன. 6

"யாழ்ப்பாணம், ஆரியகுளத்தில் பொதுமக்களின் சமய உரிமையை மீறும் வகையில் செயற்படும் அதிகாரம் மாநகர சபைக்குக் கிடையாது" என்ற சாரப்பட- மாநகர சபையை அச்சுறுத் 15

## 'ரவுண்ட்– அப்' விசிறிய விஷமிகள் 2 ஏக்கர் நெற்பயிர்கள் அழிப்பு

கிளிநொச்சி, ஜன. 6

தடைசெய்யப்பட்ட கிருமிநாசினியான ரவுண்ட் -அப் எனப்படும் கிருமிநாசினியை, இரண்டு ஏக்கர் நெற்பயிர்களுக்கு விசிறியதால் அவை கருகி அழிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 15

## ஒத்திவைக்கப்பட்ட சிறை; 12 மீனவர்களும் விடுவிப்பு!

மன்னார், ஜன. 6

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்களுக்கும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதித்து, விடுவித்தது மன்னார் நீதிமன்று. குறித்த மீனவர்களைக் கடந்த 19ஆம் திகதி தலை மன்னார் 08

## வாந்தி எடுத்தவர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஜன. 6

இரவு உணவு உட்கொண்டபின்னர் உறங்கச்சென்றவர், சில மணிநேரத்தில் வாந்தி எடுத்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா 08

**முச்சந்தி முரளி**



"கொரோனா, டெங்கு எண்டு இப்ப மலேரியாவும் கூட்டணி போட்டு எங்களை நல்லா வைச்சு செய்யப் போகுது போல. அலேட்டா இருங்கோ மக்களே!"

யாழ்.பல்கலைக்கழகத்தில்

## பகிடிவதையில் ஈடுபட்ட மாணவனுக்குத் தடை!

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், புதுமுக மாணவர்கள் மீது பகிடிவதையில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்படும் விஞ்ஞான பீட மாணவன் ஒருவர் மறு அறிவித்தல் 15

பெரும்பான்மையினத்தவர் தலைவரானதால்

## பனை அபிவிருத்திச் சபையில் 3 வருடங்களாக ஊழல், மோசடி!

நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஜன. 6

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர்களாக கடந்த காலங்களில் தமிழர்களே இருந்தனர். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலையீட்டாலேயே நிர்வாகம் வழமைக்கு!

**யாழ்ப்பாணம், ஜன. 6**

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி உரிய வகையில் பொறுப்புக்களை கையளிக்காமல் சென்றதால், மருத்துவமனை நிர்வாகத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டிருந்தது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தலையிட்டு, பணிப்பாளர் ஒருவரை நியமித்தமையாலேயே மருத்துவமனை செயற்பாடுகள் தற்போது சீராக இடம்பெறுகின்றன. - இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக் கிளையினர் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பணிப்பாளராகக் கடமையாற்றி தற்போது தனது பட்டப்பின் படிப்பை வெளிநாட்டில் தொடர்ந்துவரும் மருத்துவர் த.சத்தியமூர்த்தி 'உதயன்' பத்திரிகைக்கு வழங்கிய பதிலில், மருத்துவமனைக்கு பணிப்பாளரை நியமிப்பது சுகாதார அமைச்சின் பணி என்று குறிப்பிட்டிருந்தார். இதில் எமக்கு மாற்றுக் கருத்து இல்லை. கடந்த தடவை அவர் வெளிநாடு செல்லும்போது தனது பொறுப்புக்களை பிரதிப்பணிப் பாளர் மருத்துவர் ஸ்ரீபவானந்த ராஜாவிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றிருந்தார். இந்த முறை அவ்வாறு செய்யாதது ஏன் என்றுதான் கேள்வி எழுப்பியிருந்தோம். தான் இல்லாதவேளையில் நிர்வாகம் நன்றாக நடந்துவிடக் கூடாது என்ற எண்ணம் அவருக்கு உள்ளதைத்தான் இது எடுத்துக் காட்டுகின்றது.

சுகாதார அமைச்சிலிருந்து பதில் நியமனத்தை செயற்படுத்துவதற்கு ஒரு குறிப்பிட்ட காலஇடைவெளி தேவைப்படுவது தவிர்க்கமுடியாதது. கடந்த முறை மருத்துவர் த.சத்தியமூர்த்தி வெளிநாடு செல்லும்போது பதில் பணிப்பாளராக மருத்துவர் ஸ்ரீபவானந்தராஜாவை நியமித்திருந்தார். அவரும் கடமைகளை மிகச் செவ்வனே முன்னெடுந்திருந்தார். நியமனக்கடிதம் மத்திய அமைச்சிலிருந்துவர குறிப்பிட்ட காலம் எடுத்திருந்தது. இந்த நடைமுறை மருத்துவர் த.சத்தியமூர்த்திக்கு தெரிந்தபோதிலும் அவர் இந்த முறை தனது பொறுப்புக்களை கையளித்து சென்றிருக்க வில்லை.

எமது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தலையிட்டு அழுத்தங்களைப் பிரயோகித்ததாலேயே ஒரு பதில் பணிப்பாளர் கடந்த 3ஆம் திகதியன்று சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டிருக்கிறார். கடந்த 8 நாள்களாக பணிப்பாளர் வெற்றிடம் காணப்பட்டது. மருத்துவமனை நடவடிக்கைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தன. நாம் தலையிட்டிருக்காவிட்டால் மருத்துவமனையின் சேவைகள் மிக மோசமாகத் தொடர்ந்திருக்கும். இதற்குக் காரணம், மருத்துவர் த.சத்தியமூர்த்தியின் அசமந்தப் போக்கு என்பதா அல்லது அதிகார அதீத ஆசை என்பதா என்பது அவருக்கே வெளிச்சம்.

அவர் வெளிநாடு சென்ற நிலையில் நிர்வாக அலுவல்கள் தொடர்பாகத் தன்னைத் தொடர்புகொள்ளுமாறு கூறி மருத்துவ நிபுணர்களுக்கு மின்னஞ்சல் அனுப்பியதை நாம் வெளிப்படுத்தியிருந்தோம். பதவியாசை பிடித்தவர் அல்ல எனவும் தம்மீது பொய்ப்புகார் கூறுவதாகவும் அவர் தெரிவித்திருந்தாலும், நாம் வெளிப்படுத்திய அந்த மின்னஞ்சல் தொடர்பில் ஒரு கருத்தும்கூறவில்லை. அது தொடர்பில் விளக்கம் அளிக்கவும் தவறியுள்ளமை, எங்கப்பன் குதிருக்குள் இல்லை எனும் நிலைப்பாட்டையே காட்டுகிறது.

மக்களுக்கான சுகாதார சேவையிலும் இடையறாத தடங்கல் இன்றிய அரச சேவையில் மிகுந்த அக்கறையும் பொறுப்பும் கொண்டவர்களாகிய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினராகிய நாம், மருத்துவர் த.சத்தியமூர்த்தி தனது பொறுப்பை உரிய பதில் பணிப்பாளரிடம் வழங்காமையால் நிர்வாகம் குழப்பமுற் றமை, மருத்துவப் பட்டப்பின் படிப்புக் கல்லூரியின் விதிகளை மீறி, வெளிநாட்டிலிருந்து மின்னஞ்சல் பணிப்பாளராக பதவியிலிருக்க விளைந்தமை, இது தொடர்பாக ஊடகங்களுக்கு முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களைத் தொடர்ந்து வழங்குவது ஆகியன தொடர்பில் அதிருப்தியையும் வன்மையான கண்டனங்களையும் தெரிவித்துக் கொள்கி றோம் என்றுள்ளது. (ம-இ)

## கொரோனா இடைத்தங்கல் நிலையங்கள்
# நிதிப் பற்றாக்குறையால் மூடப்படும் அபாயநிலை

*மன்னார் சுகாதாரப்பணிப்பாளர் தெரிவிப்பு*



கொழும்பு, ஜன. 6

மன்னாரில் இயங்கிவந்த இரண்டு கொரோனா இடைத்தங்கல் நிலையங்கள், நிதிப்பற்றாக்குறை காரணமாக மூடப்படும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரு வருடங்களாக நாம் ஒரு கடினமான நிலையில் பயணித்து வருகின்றோம். கொரோனாப் பெருந்தொற்றால் எமது அபிவிருத்தி களையும் நாளாந்தக் கடமைகளையும் நாம் வழமைபோன்று செய்துகொள்ள முடி யாத நிலையில் உள் ளோம். மன்னாரைப் பொறுத்த மட்டில் முதலாவது தடுப்பூசியை 85 வீதமான மக்கள் பெற்றுள்ளனர். இரண்டாவது தடுப்பூசியை 77 வீதமான மக்கள் பெற்றுள்ளனர். எனினும் பூஸ்டர் தடுப்பூசியைப் பெறுபவர்களின் சதவீதம் மிகக் குறைந்த அளவில்தான் உள்ளது.

25 வீதமான மக்கள்கூட மன்னாரில் பூஸ்டர் தடுப்பூசியைப் பெறவில்லை. பூஸ்டர் தடுப்பூசியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதை அனைவரும் பெற்றுக் கொள்ள முன்வரவேண்டும்.

நாட்டின் சூழ்நிலை எல்லாத் திணைக்களங்களிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள் ளது.

இதற்கமைய எங்கள் திணைக்களங்களிலும் இந்தத் தாக்கத்தை உணரக்கூடியதாக உள்ளது. அதாவது தாராபுரம் மற்றும் சிறுநாவற்குளம் ஆகிய இடைத்தங்கல் நிலையங்கள் மூடப்படும் அபாயநிலை காணப்படுகின்றது. காரணம் இவர்களுக்கு உணவு வழங்குவதற்கு மாகாண சபையில் நிதி இல்லாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்தும் முடிந்தளவு எங்களால் இயன்ற செயற்பாட்டை முன்னெடுத்துச்செல்லத் திட்டமிட்டுள் ளோம்- என்றார். (ம-56)



கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த, பிரிகேடியர் பண்டுக்க பெரேராவின் இறுதிக்கிரியைகள் கடந்த 3ஆம் திகதி கடவத்தல எல்தெனிய மயானத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இருவரும் இராணுவ சித்தாந்தங்களுடான மரியாதையை பரஸ்பரம் செலுத்திக்கொண்டனர். (ம)

## விபத்தில் ஆசிரியர் இறப்பு
# சட்டத்தரணியின் சாரதியை மறியலில் வைக்க உத்தரவு!

யாழ்ப்பாணத்தில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர், இடம்பெற்ற விபத்தில் ஆசிரியர் உயிரிழந்தமை தொடர்பில் மூத்த சட்டத்தரணியான த.கங்காதரனின் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் நீதிவான் பீற்றர்போல் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியரான வேலுப்பிள்ளை யுகபாலசிங்கம் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தார். சட்டத்தரணியின் கார் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், சடுதியாக காரின் கதவு திறக்கப்பட்டுள்ளது. கதவுடன் மோதுண்டு குறித்த ஆசிரியர் வீதியில் விழுந்தார். இதையடுத்து ஆசிரியருக்குப் பின்னால் வந்த பேருந்து அவர் மீது மோதியுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது காரின் கதவு திறக்கப்பட்டதால் நிலைகுலைந்த ஆசிரியர் கீழே விழுந்ததனால்தான் பின்னால் வந்த பேருந்து, குறித்த ஆசிரியர்மீது மோத வேண்டிய நிலை ஏற்பட்டது என பொலிஸார் சமர்ப்பணம் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் பேருந்துச் சாரதியை பிணையில் செல்ல அனுமதித்தார். சட்டத்தரணியின் சாரதியை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-20)

# சிலிண்டர்கள் கொள்ளை 3 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு.ஜன.6

லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவன முகவரின் லொறியிலிருந்த சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மூன்றைக் கொள்ளையிட்டனர் என்ற குற்றச்சாட்டில், மூன்று சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கொள்ளுப்பிட்டி பிளவர் வீதியில் நடந்துள்ளது.

சமையல்காரர், உணவகம் ஒன்றில் மதுபான பிரிவுக்குப் பொறுப்பான ஒருவர், முச்சக்கர வண்டிச் சாரதி ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

முச்சக்கர வண்டியொன்றில் சென்ற சந்தேகநபர்கள், லொறியின் உதவியாளரைத் தாக்கிவிட்டு மூன்று சிலிண்டர்களைக் கொள்ளையிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-இ)

# சுசிலை பதவிநீக்கிய ஜனாதிபதி, லான்சாவை ஏன் நீக்கவில்லை?
## *முன்னாள் ஜனாதிபதி மைத்திரி கேள்வி*

கொழும்பு, ஜன. 6

சுசில் பிரேமஜயந்தவைவிட அரசாங்கத்தை விமர்சித்த இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா ஏன் இதுவரை பதவியிலிருந்து நீக்கப்படவில்லை என சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஓர் இராஜாங்க அமைச்சரைப் பதவி நீக்கி, அனைத்துச் சம்பவங்களுக்கும் தீர்வுகாண முடியாது. பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுத்தால் சமூகப் பிளவுகளைத் தடுக்க முடியும். சுசில் பிரேமஜயந்தவைவிட அரசாங்கத்தை விமர்சித்த இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா ஏன் இதுவரை பதவியில் இருந்து நீக்கப்படவில்லை. இதற்கான காரணம் என்னவென்று எனக்குத்தெரியும். நான் அறிந்தவரையில், கடந்த வாரம் அரசாங்கத்துக்கு எதிராக கடுமையான கருத்துக்களை வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் லான்சா அவரது அமைச்சிலிருந்து நீக்கப்பட மாட்டார் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள்களுக்குத் தட்டுப்பாட்டை தவிர்ப்பதற்காகத்தான் வரிநீக்கம்

## அரசு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 6



**அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதை தற்போது சாத்தியமான விடயமாகக் கருத முடியாது. ஆனால், பொருள்களுக்கு ஏற்படக்கூடிய தட்டுப்பாடுகளை தவிர்க்கும் வகையிலேயே வரி நீக்கம் செய்யப்பட்டுள்ளது - என்று அரசு அறிவித்துள்ளது.**

இது தொடர்பில் அமைச்சர் உதய கம்மன்பில மேலும் தெரிவித்ததாவது:-

பொருள்களின் விலை அதிகரித்துச் செல்கின்றமை இலங்கையில் மாத்திரம் காணப்படும் நிலைவரம் அல்ல. முழு உலகிலும் இந்த நிலைமையே காணப்படுகிறது. எமது ஏற்றுமதிப் போகங்களின் வருமானம் அதிகரித்துள்ளது.உலகச் சந்தையில் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. ஏற்றுமதியை விட அதிகமாக இறக்குமதி செய்யும் நாடு என்றவகையில் உலகில் சகல பொருள்களின் விலைகளும் அதிகரிக்கும்போது அதன்சூடு இலங்கையிலும் உணரப்படும். நாட்டில் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும்போது அவற்றை இறக்குமதி செய்வதன் ஊடாக விலைகள் கட்டுப்படுத்தப்படும். எனினும் இன்று உலகளாவிய ரீதியிலான விநியோகமும் முற்றாகச் சரிவடைந்துள்ளது.

கொள்வனவு செய்யவேண்டிய தேவை காணப்பட்டாலும், அதற்கு பொருள்களும் அந்நியச் செலாவணி இருப்பும் இல்லை. எனவே முன்னைய காலங்களைப் போன்று, பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும்போது இறக்குமதி செய்வதன் ஊடாக விலைகளைக் கட்டுப்படுத்தும் திறன் தற்போது அரசாங்கத்துக்கு இல்லை. எனவேதான் பொருள்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால், அதனால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணத்தை வழங்கி, பணவீக்கம், வாழ்க்கைச் செலவு என்பவற்றின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதே இந்தத் தீர்மானத்தின் இலக்கு - என்றார். (ம)

## அறக்கொடை விழா

யாழ்ப்பாணம்,ஜன.6

சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியின் 97ஆவது பிறந்தநாள் அறக்கொடைவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறும்.

கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், யாழ். போதனா மருத்துவமனை இருதய சத்திர சிகிச்சைப்பிரிவு, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை, சிவத்தமிழ்ச் செல்வி கல்வி நிதியம் ஆகியவற்றுக்கு அறக்கொடை வழங்கல், பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம், முன்னாள் பணிப்பாளர் ச.அருளானந்தம், ஓய்வுநிலை விரிவுரையாளர் சாந்தினி சிவநேசன் ஆகியோருக்கு சிவத்தமிழ் விருது வழங்கல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும். (ஒ-4-இ)

## பஸ்மீது தாக்குதல் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம்,ஜன.6

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தின்மீது தாக்குதலை மேற்கொண்டதுடன், சாரதி மற்றும் நடந்துநர்மீதும் தாக்குதல் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் மட்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி பஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் குறித்த பேருந்தை இடைமறித்த கும்பல்ஒன்று, இந்தத் தாக்குதலை நடத்தியது.

அதில் சாரதி மற்றும் நடத்துநர் காயமடைந்தனர். மேலதிக விசாரணையில் நெல்லியடிப் பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர். ஏனையவர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஒ-4-26)

## பொன்னாலை

# வரதராஜப் பெருமாள் மஹோற்சவம் ஆரம்பம்





யாழ்ப்பாணம்,ஜன.6

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய, மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி மஹோற்சவம் நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 10தினங்கள் உற்சவங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை சுழிபுரம் திருவடிநிலையில் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

மறுநாள் சனிக்கிழமை 1008 சங்காபிஷேகமும், பூந்தண்டிகை உற்சவமும் இடம்பெறும். பக்தர்கள் சுகாதார விதிமுறை களைக் கடைப்பிடித்து, திருவிழாவில் கலந்துகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-125)

# 10,000 தொன் எரிவாயுவுடன் நாட்டை வந்தடையும் கப்பல்

கொழும்பு,ஜன.6

10ஆயிரம் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பலொன்று நாட்டை வந்தடையும் என்று லாப் காஸ் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது நாளாந்தம் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றன என்று எரிவாயு நிறுவனத்தின் தலைவர் வேகபிட்டிய தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குக் கொண்டு வரும் எரிவாயுவின் கலவை முறை பரிசோதனைக்குட்படுத்தப்படுகின்றது. இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் அனுமதியுடன், எரிவாயு விநியோகச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. (ஒ-4-இ)





வவுனியாவில கிட்டடியில நடந்த ஒரு சம்பவம் சர்ச்சையா மாறியிருக்கு. 'வவுனியம்' என்ட நூலை ஒவ்வொரு வருசமும், வவுனியா கலாசாரப்பேரவை வெளியிடுறது வழமை. இந்த வருசமும் பெருமெடுப்பில வவுனியம் நூலின்ர வெளியீட்டு விழா போனகிழமை நடந்தது.

அந்த நிகழ்வுக்கு ஆரை விருந்தினராக் கூப்பிடுறது. ஆர் முதற்பிரதியை வாங்கிறது என்டெல்லாம் முதலே கலாசாரப் பேரவை ஒரு கூட்டம் வைச்சு முடிவெடுத்து, அதின்படியேதான் எல்லா ஏற்பாடுகளும் நடந்தது. நிகழ்வும் தொடங்கிட்டுது. ஆனால் மங்கல விளக்கேத்தலிலையே சலசலப்பு தொடங்கிட்டு. அழைப்பிதழில பேர் போட்ட விருந்தினர்மார், மூத்த கலைஞர்கள், ஆளுமையான படைப்பாளிகள் எண்டு சபையில கனபேர் நிக்க , மங்கல விளக்கேத்துற ஆக்களின்ர வரிசையில மூண்டாவதா ஒரு ஆளை அழையா விருந்தாளியை ( அழையாக் குமரன் எண்டும் சொல்லலாம்) கூப்பிட்டிச்சினம். அவரும் ஒரு படைப்பாளிதான். ஆனால் அவரைவிட முக்கியமான ஆக்கள், ஆளுமையுள்ளவையை விட்டுட்டு, திடீரெண்டு அவருக்கு மங்கல விளக்கேத்துற சான்ஸை ஏன் குடுத்தவை எண்டு கனபேர் உடனேயே தங்களுக்க கதைக்கத் தொடங்கிட்டினம்.

விசயம் அதோட நிக்கேலை. நிகழ்வின்ர முக்கியமான தருணம். வவுனியம் நூலை வெளியிடவேணும். வழக்கமா மாவட்ட அரச அதிபர் வெளியிட, நிகழ்வுக்கு வந்த பிரதம விருந்தினர் அதை வாங்கிறதுதான் இதுவரை நடைமுறையா இருந்தது. அப்பிடிப் பார்த்தால் அந்த நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினரா வந்த வவுனியாப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தான் முதற்பிரதியைப் பெறவேணும். ஆனால், டக்கெண்டு அதை மாத்தி, நூலை துணைவேந்தர் வெளியிட,அதை ஏற்கனவே சொன்ன 'அழையாக் குமரன்' வாங்கினார். இதுதான் எல்லாருக்கும் கடுப்பு. 'என்னதகுதி இருக்கெண்டு அவரை முதற்பிரதி வாங்கிற மாதிரி சம்பிரதாயத்தை கலாசார உத்தியோகத்தர் மாத்தினவர், அதுவும் கூட்டத்தில எடுத்த முடிவுக்கு மாறா ஏன் இப்பிடிச் செய்தவை? 'எண்டு எல்லாரும் ஆளையாள் பாத்திச்சினம்.

ஆனால், அப்பிடி திடீரெண்டு ஒரு அழையாக் குமரனுக்கு, மங்கலவிளக்கேத்துறதுக்கும், முதல் பிரதியை வாங்கிறதுக்கும் சான்ஸ் குடுத்ததுக்குப் பின்னால சிலபல காரணங்கள் இருக்காம். அதில முக்கியமானது, அந்த அழையாக்குமரன் ஒரு கட்சியின்ர மத்தியகுழுவில இருக்கிறாராம். இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த கலாசார உத்தியோகத்தருக்கு கிட்டடியில இடமாற்ற உத்தரவு வந்திருக்கு. உடனேயே அழையாக்குமரனிட்ட ஓடிப்போயிருக்கிறார். அழையாக்குமரனும் இன்னொரு கட்சியின்ர எம்.பி மூலமா அந்த இடமாற்றத்தைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார் எண்டு கதை. அதுக்கு நன்றிக்கடனுக்குதான் இந்த மங்கல விளக்கேற்றலும், முதல் பிரதியும் எண்டும் எல்லாரும் சொல்லுகினம். நல்லா வளருது கலாசாரம்!



- பட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கசிப்புடன் ஒருவர் கைது

கிளிநொச்சி,ஜன.6

மோட்டார் சைக்கிளில் கசிப்பை எடுத்துச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவத்தினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து விசுவமடுவிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கிச் சென்றபோது சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிமிருந்து 21லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டது. சந்தேகநபர் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பின் பொலிஸ் பிணையில் விடுவிக்க ப்பட்டுள்ளார். (ஒ-4-113)

டொலர் பற்றாக்குறை காரணமாக

# கால்நடைகளுக்கான உணவை இறக்குமதி செய்வதில் நெருக்கடி!

கொழும்பு, ஜன. 6

**டொலர் பற்றாக்குறை காரணமாக தேசிய மிருகவள அபிவிருத்திச் சபையால் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்கு அவசியமான ஆயிரத்து 500 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் தேசிய மிருகவள அபிவிருத்திச் சபையின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள சமித் கமகே தெரிவித்ததாவது: சோளத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக தேசிய மிருகவள அபிவிருத்திச் சபையால் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்கு அவசியமான ஆயிரத்து 500மெற்றிக்தொன் சோளத்தை இறக்குமதிசெய்ய தீர்மானிக்கப்பட்டது. இதற்கு அரசாங்கத்தின் அனுமதி கிடைத்தது. எனினும் டொலர் பற்றாக்குறை காரணமாக சோளத்தை இறக்குமதி செய்ய முடியாதநிலை காணப்படுகின்றது.

அதேநேரம், சோள இறக்குமதி தாமதமடைந்துள்ளமை காரணமாக, அற்குப் பதிலாக பயிர்ச் செய்கையாளர்களிடமிருந்து சோளத்தைக் கொள்வனவுசெய்து கால்நடைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)



## வெள்ளத்தால் குடும்பங்கள் இடம்பெயர்வு

தென்மராட்சி ஜே/328 தவசிகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பாதிப்பால், 8 குடும்பங்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து வேறிடங்களில் தங்கியுள்ளனர்.

இங்கு 561 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 834பேர் வசித்துவரும் நிலையில், சுமார் 52 குடும்பங்கள் மிக மோசமான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த நான்கு நாள்களாக பெய்த கனமழையால், மேலும் பாதிப்புக்களைச் சந்தித்துள்ளனர். பாதிக்கப்பட்டுள்ளவர்கள் இராணுவத்தின் உதவியையும் நாடியுள்ளனர். இதனையடுத்து பெக்கோ இயந்திரம் மூலம் வாய்க்காலை வெட்டி, வெள்ளத்தை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ஒ-4-159)

## குடியிருக்க வீடில்லை பெண்ணின் திடீர் முடிவு

வவுனியா,ஜன.6

குடியிருக்க வீடு இல்லை எனக் கூறி, வீட்டுப் பொருள்களுடன் கிராம அலுவலர் அலுவலகத்துக்குள் சென்று தங்கிய பெண்ணால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் வவுனியா - தோணிக்கல் கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

தோணிக்கல், ஆலடிப்பகுதியில் பிறிதொரு நபரின் வீட்டில் வசித்துவந்த பெண் ஒருவரை, வீட்டுத் திருத்தவேலை காரணமாக குறித்த வீட்டின் உரிமையாளர் வெளியேற்றியுள்ளார்.

இதனையடுத்து வாகனம் ஒன்றில் பொருள்களை ஏற்றியபெண், தோணிக்கல் கிராம அலுவலர் அலுவலகத்திலுள்ள அறை ஒன்றுக்குள் புகுந்துள்ளார்.

இதனையறிந்த பதில் கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர், பிரதேச செயலர் மற்றும் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா பிரதேச செயலகத்தின் மகளிர் உத்தியோகத்தர்கள், அவரது நிலைமைகளைக் கேட்டறிந்தனர். பொலிஸாரின் உதவியுடன் அவரை வவுனியா மருத்துவமனையில் சேர்த்தனர். சிகிச்சையின் பின்னர் அவர் தங்குவதற்கான இடத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஒ-4-18)





## முன்னாள் அதிபருக்கு 'அன்பே சிவம்' விருது

யாழ்ப்பாணம்,ஜன.6

அகில இலங்கை சைவ மகா சபையால் அறிவிக்கப்பட்ட 'அன்பே சிவம் விருது', மனிதநேய சமூக செயற்பாட்டாளரும், யாழ். இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான சிவத்திரு. அப்பாத்துரை பஞ்சலிங்கத்துக்கு வழங்கப்படவுள்ளது.

2019ஆம் ஆண்டு 'அன்பே சிவம்' விருது மனிதநேய மருத்துவர் மகப்பேற்று நிபுணர் சரவணபவனுக்கு வழங்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டு கொரோனாத் தொற்றுக் காரணமாக இந்தவிருது வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4-27)

அதிபர், ஆசிரியர்களின்

## சம்பள முரண்பாடுகள் உடனடியாகத் தீரும்!

அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 6

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளைக் களையும் முன்மொழிவுகள் ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டைக் களையும் வகையில் முன்மொழியப்பட்ட சம்பளத் திருத்தங்கள் இந்த மாதம் நடைமுறைப்படுத்தப்படும். இதன்படி, 2 லட்சத்து 47 ஆயிரம் ஆசிரியர்களுக்கும், 16 ஆயிரம் அதிபர்களுக்கும் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட சம்பளங்கள் வழங்கப்படும். அதிபர், ஆசிரியர்களுக்கான சம்பள முரண்பாட்டைக் களைவதற்காகத் திருத்தி அமைக்கப்பட்ட சம்பளங்களை வழங்குவதற்கு அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ம)

## எரிவாயு சிலிண்டருக்காக 315 கிலோ மீற்றர் பயணம்

கொழும்பு,ஜன.6

வர்த்தகர் ஒருவர், சமையல் எரிவாயு சிலிண்டருக்காக, 315 கிலோமீற்றர் பயணித்த சம்பவம் ஹிக்கடுவையில் இடம்பெற்றுள்ளது.

சிறிய வர்த்தகம் மேற்கொள்ளும் நபர், தனது நாளாந்த நடவடிக்கைக்கு அவசியமான சிலிண்டரைத்தேடி இவ்வாறு பயணித்துள்ளார்.

ஹிக்கடுவையிலிருந்து பொலநறுவைக்குச் சென்றவர், 12.5 கிலோ எடைக்கான இரண்டு வெற்று சிலிண்டர்களையும், 5 கிலோ எடைக்கான ஒரு வெற்று சிலிண்டரையும் எடுத்துச் சென்றுள்ளார்.

315 கிலோ மீற்றர் பயணத்தின் இறுதியில் 37 கிலோ அளவிலான சிலிண்டரைப் பெற்றுக்கொண்டு, முச்சக்கர வண்டியில் மீண்டும் ஹிக்கடுவை நோக்கி மகிழ்ச்சியுடன் பயணித்துள்ளார். (ஒ-4-இ)

## ஆளுமையான அதிபரே தேவை; பெற்றோர் ஆர்ப்பாட்டம்



வவுனியா,ஜன.6

ஆளுமையான அதிபரை நியமிக்குமாறுகோரி, வவுனியா ஸ்ரீஇராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்துக்கு முன்பாக பெற்றோர் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"பாடசாலையில், கடமையில் இருந்த அதிபர் கடந்த 3 மாதங்களுக்கு முன்பாக இடமாற்றலாகிச் சென்றுள்ளார். அதனால் பிரதி அதிபர் பதில் அதிபராகக் கடமையாற்றினார். [illegible] அதிபர் நியமிக்கப்படவுள்ளார் என்று அறிகின்றோம். அவர் 35 மாணவர்களைக் கொண்ட பாடசாலையை [illegible] மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலைக்கு ஆளுமையுள்ள அதிபரை நியமிப்பதே பொருத்தமானது. அரசியல் தலையீடுகளைத் தவிர்த்து அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பெற்றோர் கோரிக்கை விடுத்தனர்.

"அரசியல்வாதிகளே வளர்ந்துவரும் எமது பாடசாலையை நாசமாக்க இடங்கொடுக்காதீர்கள், பிள்ளைகளின் எதிர்காலத்தை நாசமாக்காதே, பெற்றோரின் கோரிக்கைக்கு காது கொடு" போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர். (ஒ-4-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலை இல்லாதொழிக்க ஐ.ம.சக்தி முன்னிற்கும்

*சஜித் உறுதி*

கொழும்பு.ஜன.6
நாட்டின் கோடிக்கணக்கான பெறுமதியான சொத்துக்கள் ஊழல்களால் விழுங்கப்படுகின்றன. எனவே ஊழலை முழுமையாக இல்லாதொழிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நிபந்தனையின்றி முன்னிற்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அதிநவீன தொழில்நுட்பத்துடன்கூடிய திறமையான இளம்தலைமுறையை உருவாக்கும் நோக்கில், டிஜிற்றல் கணினித் திரைகள் மற்றும் கணினி உபகரணங்களை வழங்கும் முன்னோடித் திட்டமான 'பிரபஞ்சம்' இரண்டாம் கட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்; நாட்டில் தலைவிரித்தாடுவது திருட்டு, ஊழல் மற்றும் இலஞ்சம். இவற்றை முழுமையாக இல்லாதொழிப்பதே எமது இலக்கு - என்றார். (ஒ-4-இ)

# தனியார் துறையினருக்கும் 5,000 ரூபா கொடுப்பனவு!

*தொழிற்றுறை அமைச்சர் வலியுறுத்து*



**கொழும்பு, ஜன. 6**

**தனியார்துறையில் கடமையாற்றிவரும் ஊழியர்களுக்கும் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவது குறித்து அரசு கவனம் செலுத்திவருகின்றது என்று தொழிற்றுறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை அரசாங்க ஊழியர்களைப்போன்றே தனியார்துறையினரையும் பாதிக்கும் என்ற காரணத்தால் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். இந்த விவகாரம் தொடர்பில் தொழில் தருநர்களுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது.

ஆடைத்தொழிற்சாலைகள், பெருந்தோட்டத்துறை, சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மையாளர்கள், கடைகள் காரியாலய சட்டத்தின் கீழ் நிர்வாகம் செய்யப்படும் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்துத் தனியார் துறையைச் சேர்ந்த தொழில் தருநர்களுடனும் இந்த 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு குறித்துப் பேச்சு நடத்தப்படும் - என்றார். (ம)

# மருத்துவர் இடமாற்ற சபை; மாற்றங்களை ஏற்படுத்தாதீர்

*பிரதமர் தெரிவிப்பு*

கொழும்பு.ஜன.6
மருத்துவ நிபுணர்களின் இடமாற்ற சபை தொடர்பான பிரச்சினைகளுக்கு, அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்புடன் தீர்வு காண வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினருடன் அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுவரை காணப்பட்ட முறைமையை மாற்றுவதற்கு முயற்சிப்பதன் ஊடாக, நெருக்கடிகள் ஏற்படும் என்று பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இடமாற்ற சபை விவகாரத்தில் நான் தலையிட்டால் அரசியல் தலையீடு என்ற குற்றச்சாட்டு எழும். அதனால் என்னால் தலையீடு செய்ய முடியாது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

மருத்துவ நிர்வாகத்தை சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட என இரு பிரிவுகளாகப் பிரித்துச் செயற்படுத்தாது, ஒரே அடிப்படையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் சார்பில், அனுருத்த பாதெனிய கோரிக்கை விடுத்தார்.

உயர் நிர்வாகம் ஏதேனும் தீர்மானம் மேற்கொள்ளும்போது, அதன் பிரச்சினையான சூழ்நிலை தொடர்பில் பேச்சுமூலம் இருதரப்பினரும் ஒரு தீர்மானத்துக்குவருவது அவசியம் என்று பிரதமர் ஆலோசனை வழங்கினார். (ஒ-4-இ)

*ஜனாதிபதியால் பதவிநீக்கப்பட்ட*

# சுசில் பிரேமஜயந்தவுடன் பிரதமர் கலந்துரையாடல்?

கொழும்பு, ஜன. 6
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் பதவி நீக்கப்பட்ட சுசில் பிரேமஜயந்தவுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ச கலந்துரையாடியுள்ளார் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சுசில் நீக்கப்பட்டார். இதன்பின்னர் பிரதமர் தம்மைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு கருத்துப் பகிர்ந்தார் என்று சுசில் பிரேமஜயந்த தகவல் வெளியிட்டுள்ளார். (ம)



முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட 21 பேருக்கு, காணிக் கச்சேரிமூலம் காணி உறுதிப்பத்திரங்கள் நேற்று முன்தினம் பிரதேசசெயலகத்தில் வழங்கப்பட்டன.

பிரதேச செயலர் நிறஞ்சனா தலைமையில், கிராம அலுவலர், காணிக்குழு உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்பு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு காணி உறுதிப் பத்திரங்களை பயனாளிகளுக்கு வழங்கினர். (ஒ-ரி1-19)

# தகுதியில்லாதவர்களை நீக்க எனக்கு முழு அதிகாரமுண்டு

*ஜனாதிபதி மிரட்டல்தொனி*



கொழும்பு, ஜன. 6
தகுதியில்லாதவர்களை அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்குவதற்கு ஜனாதிபதியான எனக்கு முழு அதிகாரம் உண்டு என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் நேற்று நடத்திய விசேட கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

'அரசின் முதுகெலும்பாக அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும் இருக்கவேண்டும். அவ்வாறானவர்கள் அரசையும், அதன் கொள்கையையும் பொதுவெளியில் விமர்சிப்பது எந்த வகையில் நியாயம்? அவர்களுக்கு அமைச்சுப் பதவி எதற்கு? இது அவர்களின் ஒழுக்கமின்மையையும், தகுதியின்மையையும் எடுத்துக்காட்டுகின்றது. அப்படியானவர்களின் பதவியைப் பறிக்க ஜனாதிபதியான எனக்கு முழு அதிகாரம் உண்டு. இது தொடர்பில் அரச கட்சிகளுடன் நான் பேச வேண்டிய அவசியம் இல்லை - என்றார். (ம)

## பச்சைமிளகாய் ஒரு கிலோ 1,600 ரூபா

கொழும்பு.ஜன.6
மாத்தளையில் ஒரு கிலோ பச்சைமிளகாய் ஆயிரத்து 600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் நுகர்வோர் 50 கிராம் பச்சை மிளகாயை மாத்திரமே கொள்வனவு செய்கின்றனர்.

அதேவேளை, சந்தைகளுக்கு பச்சை மிளகாய் வருகை வீழ்ச்சியடைந்துள்ளது. அதனால் விலை அதிகரித்துள்ளது என்று விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் ஆயிரம்ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட பச்சைமிளகாய், தற்போது ஆயிரத்து 600 ரூபா வரை அதிகரித்துள்ளது. (ஒ-4-இ)

# பெண் தொழிற்படைக்கு நிகராக எதுவுமில்லை

*இராஜாங்க அமைச்சர் சீதா பெருமிதம்*

கொழும்பு.ஜன.6
பூமியில் கிடைத்த இரத்தினங்களைவிட மெருகூட்டப்பட்டதும், எப்போது கிடைக்கும் என்றே தெரியாத எண்ணெய்ச் சுரங்கங்களைவிடவும் மதிப்புடையோர் பெண் தொழிற்படையினர். தொற்றுப் பரவல் காலங்களில் கூட எழுந்து நிற்கும் வலிமை கொண்டவர்கள் அவர்கள் என்று திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

நாட்டில் பெண்களின் எண்ணிக்கை 52 வீதம். ஆனால் தொழிற்படைக்கான பெண்களின் பங்களிப்பு 30 வீதமென்ற குறைந்தளவு வீதத்திலேயே இருப்பதாகக் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

பெண்களுக்கான திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சிகளை வழங்கி, அதன்மூலம் அவர்களைத் தேசிய பொருளாதாரத்துக்குப் பங்களிக்கச் செய்வதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கம்.

நாட்டில் பெண்களைப் பலப்படுத்தும் போது, அபிவிருத்தி அடைந்துவரும் நாடாக, எந்தவொரு சவால்களையும் எதிர்கொள்வதில் எவரும் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படவேண்டிய நிலைமை ஏற்படாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-4-இ)

# சுசில் பிரேமஜயந்தவை பதவி நீக்கியது சரியே

*அரச தரப்பு நியாயம்*

கொழும்பு.ஜன.6
ஜனாதிபதியால் சுசில் பிரேமஜயந்த பதவி நீக்கப்பட்டமை சரியான நடவடிக்கையையே. அரசையும் அரசின் கொள்கைகளையும் விமர்சிப்பவர்களுடன் சேர்ந்து பயணிக்கமுடியாது என்று நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்;

மூத்த அமைச்சர்கள் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். அவர்களது முதுகெலும்பு நேராக இருக்கவேண்டும். இவரது விடயத்தில் ஜனாதிபதி சரியான முடிவை எடுத்துள்ளார். வெளியில் செய்யும் அரசியலை அமைச்சரவையில் செய்யமுடியாது. நாட்டின் பெரும்பான்மையான மக்கள் வழங்கிய ஆணையை நாம் பாதுகாக்கவேண்டும். அரசுக்குள்ளேயே அமர்ந்து எதிர்க்கட்சி வேடம் போடவேண்டிய அவசியம் இல்லை -என்றார். (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 11 . 1931



இறப்பு 04 . 01 . 2022

## திரு.முருகையா பாலசுப்பிரமணியம்
### (கொல்லங்கலட்டி, பாலர்)

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும், கொழும்பு, அவுஸ்திரேலியா மற்றும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.முருகையா பாலசுப்பிரமணியம் அவர்கள் கடந்த (04.01.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையா இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், பொன்னு முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்பு கணவரும், காலஞ்சென்ற செல்லம், சிவபாக்கியம், சரஸ்வதி, காலஞ்சென்ற நவரட்ணம் ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற நாக ரத்தினம் காலஞ்சென்ற செல்வரட்ணம், திருநாவுக்கரசு, மங்கையற்கரசி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற தவராசா, தவமலர், தவராணி (Aus), தயாளினி (UK), ஸ்ரீதரன் (Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலச்சந்திரன், பூபாலசிங்கம் (Aus), காலஞ்சென்ற சிவகரன், கௌரி (கனடா) ஆகியோரின் பாசமான மாமனாரும் கஜந்தினி, ஜதிகானந், நிரோஜா, சுதாகரன், கோபி, மகிஷா, அபிஷா, பானுஜன், அனுஜியா, அமுழ்யா, காசன், கபீஷ் ஆகியோரின் அன்பு பேரனும், ஹர்ஷானந், ஹர்ஷ்வின் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஒஸ்கா லேன்,
உரும்பிராய் தெற்கு,
யாழ்ப்பாணம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
ஜதிகானந் - 077 486 9567, 0779837225
ஸ்ரீதரன் - 0016472985910
பூபாலசிங்கம் - 0061418411904
தயாளினி - 00447440510857

(CS 958) 1/6

## சிறுமி கொலை: சந்தேகநபர்களுக்கு மறியல் நீடிப்பு

முல்லைத்தீவு, மூங்கிலாறு சிறுமி உயிரிழப்பு தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 5 சந்தேகநபர்களும் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 15ஆம் திகதி மூங்கிலாறு பகுதியில் காணாமற்போன சிறுமி 18ஆம் திகதி சடல மாக மீட்கப்பட்டிருந்தார். சிறுமியின் கொலை தொடர்பில் தாய், தந்தை, சகோதரி, மைத்துனர், மைத்துனரின் தம்பி ஆகியோர் கைதுசெய்யப்பட்டு நேற்றுவரை மறி யலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் குறித்த வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. இதையடுத்தே அவர்களுக்கு எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (ம-19)

# 1ஆம் ஆண்டு நினைவு அழைப்பு



கடந்த (21.12.2020) திங்கட்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் வைகாளி சின்னத்தம்பி

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் எதிர்வரும் 09.01.2022 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


மகாறம்பை குளம்,
வவுனியா.

(cs.42035) (2.6)

**குடும்பத்தினர்**
**077 583 0110**

# மரண அறிவித்தல்

## குணரத்தினம் ஸ்ரீகாந்தன்



தோற்றம் 30.03.1950

மறைவு 04.01.2022

கற்பகபிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் ஸ்ரீகாந்தன் கடந்த செவ்வாய்க்கிழமை 04.01.2022 இறைபதம் அடைந்தார்.

அன்னார் காஞ்சென்றவர்களான குணரத்தினம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், சத்தியராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கேஸ்வரி மற்றும் பாலபூபதி காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் சிவராசா (கனடா), தர்மதுரை (கனடா) ஆகியோரின் சகோதரனும், குமாரதாசன், சிவநேசம் (சுவிஸ்), காலஞ்சென்ற விமலேந்திரன் மற்றும் திருச்செந்தில் நாயகி, காலஞ்சென்றவர்களான அரியராசா, பாலசிங்கம் மற்றும் சித்திரவதனி, இராஜலட்சுமி (கனடா), ரேவதி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், சூரியகலா, சர்மிலா, ராகுலன் (சுவிஸ்), சாலினி நிசாந் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரதீசா, ரதீசன் (கனடா), ரமணன், சிந்து (கனடா), சனோஜன் (கனடா), ஜெயந்தன் (கனடா), கோபிதன் (கனடா), அஜந்தன் (கனடா), சுயந்தன் (கனடா), சுயந்தினி (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2022) வியாழக் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகபிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**075 753 9014, 077 551 4327**

(cs.42059) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சரணாகதியும் சண்டித்தனமும்...!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்புவதற்காக தமிழ் பேசும் கட்சிகள் ஒன்று கூடி, வரைவு ஒன்றைத் தயாரிக்க எடுத்த முயற்சி தற்போது தேக்கநிலையடைந்துள்ளது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாடு காரணமாகவே இந்த நடவடிக்கை மந்தமடைந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், மூத்த அரசியல்வாதியுமான இரா.சம்பந்தன், 'எமது கொள்கைகளின் அடிப்படைகளை மீறும் வகையிலான விடயங்களுக்குத் துணைபோகமுடியாது. அவற்றை விட்டுக் கொடுக்கவும் முடியாது. அதற்காக, நாம் மலையக, முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளுக்கு எதிரானவர்கள் அல்லர். அவர்களையும் ஒருங்கிணைத்துச் செல்வதில் பிரயத்தனம் செய்கின்றோம்' என்று கடிதம் அனுப்பும் முயற்சியின் தாமதத்துக்கு காரணம் கூறியிருக்கின்றார்.

அடிப்படை விடயங்களை விட்டுக்கொடுக்க முடியாது என்கின்ற அவரது வாதமும்- நிலைப்பாடும் சரியானதே. ஆனால் இரா.சம்பந்தன் உட்பட அவரது கட்சியினர் அதில் உறுதியாக இருக்கின்றார்களா? என்ற கேள்வி எழுப்பப்படுமானால் நிச்சயம் இல்லை என்பதே பதிலாகக் கிடைக்கும்.


வரலாறுகளின் பக்கங்களைக் கிளறினால் இவர்களது அடிப்படை விடயங்களில் உறுதியான நிலைப்பாடு கேள்விக்கு உட்படுத்தப்படும். தனித் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து மக்களிடத்தில் தேர்தலுக்கு வாக்குக் கேட்டவர்கள், அதனைக் கைவிட்டு மாவட்டச் சபைக்கு இணங்கியமை எங்ஙனம்?
ஏன் நீண்ட காலம் பின்னோக்கிச் செல்லவேண்டும். கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி முன்னெடுக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் அவரது அணியினரும் அதனைச் சொல்லிக் காலத்தைக் கடத்தினார்கள் என்பது வேறுகதை. இந்த அரசமைப்பு உருவாக்க முயற்சிக்காக பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு, பல சுற்றுக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு ஒரு வரைவு தயாரிக்கப்பட்டது.
இதன்போது தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாக அவர்கள் விட்டுக்கொடுப்புக்களைச் செய்துவிட்டு, மக்கள் அரங்கில் தங்களின் தகிடுதத்தங்களை நியாயப் படுத்தவில்லையா?

வடக்கு - கிழக்கு இணைப்பைக் கைவிட்டார்கள். பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்க எதிர்ப்பின்றி இணங்கினார்கள். அடிப்படை விடயங்களில் விட்டுக்கொடுப்பு செய்து ஏதோ ஓர் அரசமைப்பை உருவாக்கினால் போதும் என்று செயலாற்றியதை மறந்து விட்டார்களா?
மக்களிடம் சமஷ்டிக்கு ஆணையைப் பெற்று, 'ஏக்கிய ராஜ்ஜியவுக்கு' விளக்கம் சொல்லிக் கொண்டு திரிந்தார்கள். அப்போது எல்லாம் அடிப்படை விடயங்களை அறவே கைவிட்டு சரணாகதி அடைந்து விட்டோம் என்று சம்பந்தனுக்கு தெரியவில்லையா?
'இளகின இரும்பைக் கண்டால் கொல்லன் ஏறியிருந்து அடிப்பானாம்' என்று ஊரில் சொல்வார்கள். அதைப் போலத்தான் இரா.சம்பந்தனும், அடித்துப்பேசிப் பெற வேண்டிய இடத்தில் எல்லாவற்றையும் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு, இப்போது ஒரு நாட்டின் பிரதமரிடம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தலையீட்டுக்குக் கோரும் கடித வரைவில் நுணுக்கங்கள் பார்த்துக்கொண்டு கதையளப்பதை என்னவென்று வர்ணிப்பது?

கடிதம் அனுப்பும் முயற்சி ரெலோவால் ஆரம்பிக்கப்பட்டது. அவர்கள் ஆரம்பித்த முயற்சியை எவ்வாறு வெற்றியடைய அனுமதிக்கலாம் என்ற தன்முனைப்பு (ஈகோ) மாத்திரமே சம்பந்தனிடம் வெளிப்படுகின்றது. தமிழ் மக்களின் நலனில் அக்கறையுள்ளவர்கள்தான் என்றால், நல்லாட்சி அரசின் காலத்திலும் தமிழ் மக்களின் அடிப்படைகளை விட்டுக்கொடுக்காமல் இருந்திருக்க வேண்டும். அப்போது சரணாகதியடைந்துவிட்டு, இப்போது சண்டித்தனம் காட்டுவதில் நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை.

**நாளொரு நல்வார்த்தை**

"இந்தப் பூமிக்கு வெளியே இருக்க ஓர் இடம் கிடைத்தால், பூமியை நெம்புகோலால் தூக்குவேன் நான்!"
- ஆர்க்கிமிடீஸ்




வெளிநாட்டுத் தொழிலாளர்கள் அனுப்பும்

# ஒவ்வொரு டொலருக்கும் 240 ரூபா வழங்குங்கள்!

## தொழிற்றுறை அமைச்சர் வலியுறுத்து



**கொழும்பு, ஜன. 6**

**இலங்கைக்கு அந்நியச் செலாவணிகளைக் கொண்டுவரும் ஊழியர்கள் அனுப்பும் ஒவ்வொரு டொலருக்கும் 240 ரூபா வழங்க வேண்டுமென தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
இலங்கைக்கு அந்நியச் செலாவணிகளைக் கொண்டுவரும் ஊழியர்கள் அனுப்பும் ஒவ்வொரு டொலருக்கும் 240 ரூபா வழங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளைத் திறைசேரி மேற்கொள்ளவேண்டும். நாடு முகங்கொடுத்துள்ள டொலர் நெருக்கடிக்கு உள்ள சிறந்த தீர்வு அது. வெளிநாட்டில் இருந்து அனுப்பப்படும் டொலருக்கு அவ்வாறாக அதிக பணம் வழங்கப்பட்டால் மக்கள் நிச்சயமாக சரியான முறையில் பணத்தை அனுப்புவார்கள். உண்டியல் முறையில் பணம் அனுப்பும் பழக்கத்தில் இருந்து அவர்களை விடுபட வைக்க முடியும் - என்றார். (ம)

# கடவுச்சீட்டுகள் விநியோகம் கடந்த ஆண்டில் எகிறியது!

## *2020ஆம் ஆண்டைவிட 150,000க்கும் அதிகம்*

கொழும்பு, ஜன. 6
2020ஆம் ஆண்டை விடவும், 2021ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடவுச்சீட்டுக்கள் கூடுதலாக விநியோகம் செய்யப்பட்டுள்ளன என்று இலங்கைக் குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.
2020ஆம் ஆண்டில் 2 லட்சத்து 7 ஆயிரத்து 695 கடவுச்சீட்டுக்கள் விநியோகம் செய்யப்பட்டதுடன், 2021ஆம் ஆண்டில் 3 லட்சத்து 80 ஆயிரத்து 230 கடவுச்சீட்டுக்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. (ம)

# வரி நீக்கப்பட்டாலும் விலை குறையாது!

## *வர்த்தகத்துறை அமைச்சர் தெரிவிப்பு*

இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்கள் மீதான வரி நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைவடையாது என்று தெரிவித்தார் வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன.
அவர் மேலும் தெரிவிக்கையில்; கொரோனாப் பரவலால் பூகோளப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்ற நோக்கில் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்கள் மீதான வரி நீக்கப்பட்டுள்ளது. இதனால் சடுதியாக பொருள்களின் விலைகள் குறையாது. கட்டம் கட்டமாகவே விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ம)

**07.01.2022**
வெள்ளிக்கிழமை
மார்கழி 23

சுபநேரம் : 06.32 - 08.02
ராகுகாலம் : 11.02 - 12.32

சுன்னாகம் மயிலணி முத்துமாரியம்பாள் கொடியேற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி சிவராசா இந்திராணி



**தோற்றம்**
**08.10.1959**

**மறைவு**
**05.01.2022**

கொக்குவிலை பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா இந்திராணி நேற்று (05.01.2022) புதன் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை நாகரத்தினம் தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், சிவராசாவின் அன்பு மனைவியும், புஸ்பலீலா, தலையசிங்கம், சந்திராதேவி ரட்ணசிங்கம் (காலஞ்சென்றவர்), சிவராசா, அன்னலிங்கம், செல்வராணி, லீலாவதி, சாந்தி (ஶ்ரீ) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயப்பிரியா (கவிதா), அச்சுதன் (ஜேர்மனி) வைகுந்தவாசன், சுகிர்தா ஆகியோரின் பாசமிகு தாயாரும், மற்றும் சசிகுமார் (Engineer Decon Construction), நிதர்சன் (Manager Sampath Bank மானிப்பாய்), காஞ்சனா, ருசாந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும் மற்றும் அபினாஷ், அஜீஸ், அக்ஷரா, அஸ்மிகா, அஸாரா, சர்வின், அக்ஷய் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2022) வியாழக் கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**வே.சிவராசா குடும்பத்தினர்.**
**(AVS அரிசியாலை-இணுவில்)**
**076 9814504**

---

**முதலாம் பக்க தொடர்ச்சிகள்....**

### ஒத்திவைக்கப்பட்ட...

கடற்படையினர் கைதுசெய்திருந்தனர்.

குறித்த மீனவர்கள், கடற்றொழில்துறைத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு, நீதிமன்றினூடாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் மீதான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அவர்கள் மீது கடற்றொழில்வளத்துறைத் திணைக்களம் மூன்று குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியது. அவற்றை மீனவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

அதனையடுத்து, மூன்று குற்றங்களுக்குமாக ஒரு வருட சாதாரண சிறைத் தண்டனை வழங்கப்பட்டு, 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர்.

குறித்த மீனவர்களில் சிறுவர் ஒருவர் உள்ளார். அவரை எச்சரித்த நீதிவான், கல்வியைத் தொடருமாறு அறிவுறுத்தி நிபந்தனை அடிப்படையில் விடுதலைசெய்தார்.

குறித்த மீனவர்கள், இலங்கைக்கான இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-56)

### கடும் எதிர்ப்பால்...

சவை அழைக்கும் முடிவுக்கு மக்களிடமிருந்தும், அரசியல்வாதிகளிடமிருந்தும் கடும் எதிர்ப்புக்கள் வெளியாகிக்கொண்டிருக்கும்நிலையில், குறித்த பட்டத்திருவிழா இந்தமுறை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம் தைப்பொங்கல் தினத்தன்று வல்வெட்டித்துறை உதயசூரியன் திடலில் நடத்தப்பட்டுவரும் பட்டத்திருவிழாவை இந்தமுறை 'சர்வதேசப் பட்டத்திருவிழா' என்ற பெயரில், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையோடு நடத்தப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தன. இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரான நாமல் ராஜபக்ச இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், நாமல் ராஜபக்ச பட்டத்திருவிழாவில் கலந்துகொள்வதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்கூட எதிர்ப்புக்கள் வலுத்தன.

இதேவேளை, அதிகரித்துவரும் கொரோனா அச்சுறுத்தல் உள்ளிட்ட காரணங்களை முன்னிறுத்தி இந்தமுறை பட்டத்திருவிழாவை இடைநிறுத்துமாறு பல்வேறு தரப்பிலிருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்தன.

இந்தநிலையில், பட்டத்திருவிழா ஏற்பாட்டு குழுவினருக்கும் பிரதேச மக்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றிருந்தது.

குறித்த கலந்துரையாடலில் பட்டத்திருவிழாவை தற்காலச் சூழ்நிலையில் இடைநிறுத்துமாறு பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து இந்தமுறை வல்வெட்டித்துறையில் பட்டத்திருவிழா இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்தனர். (த-20,26)

### 400 கிலோ...

றச்சாட்டில் 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அண்மையில் படையினரால் விடுவிக்கப்பட்ட காணியில் கைவிடப்பட்டிருந்ததாகக் கூறப்படும் குண்டுகளே இரும்புக்காகக் கடத்தப்பட்டன என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மிகப்பெரிய இரண்டு வெடிகுண்டுகளை இரும்புக்காக கடத்திச் செல்லமுற்பட்ட 6 பேரை புதுக்குடியிருப்பு பொலிஸார் நேற்றுக் கைதுசெய்தனர். இந்தக் குண்டுகள் கிபிர் விமானத்தில் இருந்து வீசப்பட்டு வெடிக்காத நிலையில் இருந்துள்ளன. கைதுசெய்யப்பட்டவர்கள் கைவேலி, புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-19)

### வாந்தி...

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம், நவாலி தெற்கு, மானிப்பாயில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது. இதே பகுதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை புஷ்பகந்தன் (வயது-42) என்பவரே உயிரிழந்தார்.

மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும். (த-25)

### நடுக்கடலில்...

கைப் படகு குறித்த பகுதிக்கு விரைந்து கயிற்றால் இணைத்து குறிகாட்டுவானில் கொண்டுசென்றுவிட்டது.

சமுத்திராதேவி படகு குறிகாட்டுவான்நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தபோது நெடுந்தீவிலிருந்து சுமார் 3கிலோமீற்றர் தூரத்தில் காலை 7.30 அளவில், படகின் திசையை வெளிப்படுத்தும் சுக்கான் உடைந்தது. அதனால், படகை தொடர்ந்தும் செலுத்தமுடியாத நிலை ஏற்பட்டு, படகு கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தது. இந்தநிலைமை தொடர்பில் வடதாரகைப் படகுக்கு தகவல் வழங்கப்பட்டது. அதனையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த வடதாரகை. சமுத்திராதேவி படகிலிருந்த பயணிகளை வடதாரகையில் ஏற்றினர். எனினும், சிலரால் அவ்வாறு ஏறமுடியாத சூழ்நிலை உருவானது. அதனால், வடதாரகை படகு, சமுத்திராதேவி படகை கயிற்றுடன் இணைத்து குறிகாட்டுவான் கரைக்கு சுமார் மு.ப. பத்து மணியளவில் கொண்டுசென்றது.

இந்தநிலைமையால் பயணிகள் அச்சத்துடனேயே பயணத்தைத் தொடர்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ஆங்கிலப் புத்தாண்டுப் பலன்கள்




கடந்த ஆண்டு ஜன்ம சனி மற்றும் ஜன்மகுருவால் பல்வேறு இடைஞ்சல்களுக்கு ஆளாகித் தவித்துக்கொண்டிருந்த மகர ராசி அன்பர்களே! சனிபகவான் உங்கள் ராசி அதிபதி. அவர் ராசியிலேயே ஆட்சிபலம்பெற்று அமர்ந்திருக்கும் இந்தக் காலகட்டத்தில் இந்தப் புத்தாண்டு பிறக்கிறது.

இந்தப் புத்தாண்டு ராசிக்கு 11ஆம் வீடான விருச்சிகத்தில் பிறப்பதால் வாழ்வில் பல்வேறு அதிரடி மாற்றங்கள் உண்டாகும். முடங்கிக்கிடந்தவர்கள் சுறுசுறுப்பாவீர்கள். வாழ்வில் பல்வேறு வகையிலும் முன்னேற்றம் ஏற்படும். அடிப்படை வசதிகளும் பெருகும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்புள்ளது.

குடும்பத்தில் இருந்த கசப்புகள்விலகி, கலகலப்பான சூழல் உருவாகும். இழுபறியாக இருந்த வேலைகள் விரைந்து முடியும். உங்கள் ராசிக்குள் சனிபகவான் நிற்கும் காலத்தில் இந்த ஆண்டு பிறப்பதால் இதுவரை இருந்த சிரமங்கள் சில நீங்கும். வீட்டில் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். பேச்சிலும் இனிமை பிறக்கும்.




எதிரிகள்கூட உங்கள் பேச்சுக்கு அடிமையாவார்கள். தோற்றத்தில் அழகும் பொலிவும் கூடும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும்.

குருபகவான் இந்த ஆண்டின் தொடக்கம் முதல் 13.4.2022 வரை உங்கள் ராசிக்கு தன குடும்ப வாக்குஸ்தானமாகிய இரண்டாம் இடத்தில் சஞ்சரிப்பதால் பணவரவுக்குப் பஞ்சம் இருக்காது. எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். திருமணம், சீமந்தம், கிரகப்பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும்.

ஆனால் 14.4.2022 முதல் வருடம் முடியும்வரை குரு 3ஆம் வீட்டிலேயே அமர்வதால் பணிச்சுமை அதிகரிக்கும்.

ராகு, கேதுவைப் பொறுத்தவரை 20.3.2022 வரை உங்கள் ராசிக்கு லாப வீட்டில் கேது இருப்பதால் எவ்வளவு பிரச்சினைகள் வந்தாலும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பங்கு மூலம் பணம் வரும். ராகு 5ஆம் வீட்டில் நிற்பதால் பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் தீர்ப்புத் தள்ளிப்போகும்.

21.3.2022 முதல் வருடம் முடியும்வரை 4இல் ராகுவும் 10இல் கேதுவும் அமர்வதால் வேலைச்சுமை அதிகரித்த வண்ணம் இருக்கும். வீண் பழி வரக்கூடும். வீண் விவாதத்தை முற்றிலும் தவிர்ப்பது நல்லது. இந்த ஆண்டு முழுவதுமே சனிபகவான் தங்கள் ராசியிலேயே ஜன்ம சனியாகத் தொடர்வதால், உடல் நலத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள்.

பணிச்சுமை அதிகமாகும். மேலதிகாரியோடு சுமுகமான உறவைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். எதிலும் கையெழுத்திடுவதற்கு முன்பாக நிதானிப்பது நல்லது.

மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு புதிய படிப்பினைகளைத் தருவதாகவும், சமூகத்திலும், வாழ்க்கையிலும் வெற்றிபெற வேண்டுமென்றால் கொஞ்சம் நெளிவுசுளிவுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதை உணர்த்துவதாகவும் அமையும்.



## இந்தியாவில்

# வேகமெடுக்கும் கொரோனா ஒரே நாளில் 534 பேர் சாவு!

புதுடில்லி, ஜன.6

இந்தியாவில் கொரோனாத் தொற்றால் ஒரேநாளில் 534 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 58,097 பேர் கொரோனாத் தொற்றால் புதிதாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இறப்பு எண்ணிக்கை 534 ஆக பதிவாகியுள்ளது.

அத்துடன் இந்தியா முழுவதும் ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 135 ஆக உயர்வடைந்துள்ளது. (ச-இ)

# கேரளாவில் மீண்டும் பரவும் பறவைக்காய்ச்சல்

கேரளா, ஜன.6

கேரளாவில் மீண்டும் பறவை காய்ச்சல் பரவிவருகின்றது. இதனால் பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் கடும் இழப்பைச் சந்தித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கேரளாவில் கடந்த 7 ஆண்டுகளில் 4ஆவது முறையாக பறவைக்காய்ச்சல் பரவி உள்ளது.

பறவைக்காய்ச்சல் கண்டறியப்பட்ட பகுதிகளில் கேரள கால்நடைத்துறையினர் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் பண்ணைகள் அமைந்துள்ள பகுதிகளில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் சுற்றளவில் கிருமிநாசினி தெளிக்கும் பணியில் ஈடுபடுவதுடன் ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# கெஜ்ரிவாலுக்கு கொரோனா

புதுடில்லி, ஜன.5

டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து தம்முடன் தொடர்பில் இருந்தவர்களைத் தனிமைப்படுத்திக்கொள்ளுமாறு தனது ருவிற்றர் பக்கத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஒமிக்ரோன் பாதிப்பில் டில்லி 2ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உங்களது முயற்சி காரணமாக கனவு ஒன்று நனவாகும். சக பணியாளர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருந்து உதவுவர். பல நாளாக இழந்திருந்த நிம்மதி மீளும். பயம் நீங்கும்.

**இடபம்:** புதிய முதலீடுகளை கவனமாகச் செய்வீர்கள். சொத்து வாங்குவது பற்றி புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள் பயம் தீரும். பணியில் அலட்சியம் வேண்டாம்.

**மிதுனம்** நண்பரிடம் குடும்ப விஷயங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். திட்டமிட்ட விஷயம் ஒன்றில் வெற்றி பெறுவீர்கள். எதையும் இரு முறை யோசித்துச் செய்வது நல்லது.

**கடகம்:** அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனையைப் பெறுவது நல்லது. குழந்தைகள் பற்றிய பயமும் கவலையும் குறைய ஆரம்பிக்கும். அவசியமின்றித் தாழ்வு மனப்பான்மை வருவதை தவிருங்கள்.

**சிம்மம்:** முயற்சியில் வெற்றி உண்டு. மனதில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகளின் திருமணம் குறித்து நல்ல முடிவு வரும். தந்தையின் தேவையை நிறைவேற்றி அவரது ஆசியைப் பெறுவீர்கள்.

**கன்னி** உறவினரால் முன்பு ஏற்பட்டிருந்த தொல்லை நீங்கும். நண்பர்களால் எதிர்பாராத நன்மை ஒன்றை [illegible] பணப்புழக்கம் சுமாராக இருக்கும்.

**துலாம்:** உறவினரால் ஆதாயம் உண்டு. செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள். நண்பர்களிடம் கேட்ட பண உதவி கிடைக்கும். முயற்சி ஒன்றுக்கு உறவினரின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்** பணியிடத்தில் சிறப்பாக செயற்பட்டு பாராட்டு வாங்குவீர்கள். உடல் ஆரோக்கியம் சீராகி நிம்மதி தரும். பணக்கவலை தீரும். உங்களது முயற்சியால் சிறு சிறு பிரச்சினைகள் முடிவுக்கு வரும்.

**தனுசு:** சகோதரர் உங்களுக்கு உதவ முன்வருவார். தடைகள் நீங்கும். உங்களுடன் இணைந்து செயற்பட சக பணியாளர்கள் முன்வருவார்கள். உங்களது முயற்சியால் சிறு சிறு பிரச்சினைகளைத் தீர்ப்பீர்கள்.

**மகரம்:** சொத்து வாங்குவது பற்றி இருந்த கவலைகள் நீங்கும். து[illegible] சில முடிவுகளை எடுத்து வளத்[illegible] காண்பீர்கள். நல்ல மாற்றம் வ[illegible] பாடுபட்டதற்கேற்ற பயன் கிடைக்கும்.

**கும்பம்** நெருங்கிய உறவினர் வழி[illegible] ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். உங்க[illegible] எதிர்பார்ப்பு நிறைவேறும். உறவினரின் ஆதரவு கிடைக்கும். குழந்தைகளின் வாழ்வில் வளம் ஏற்பட்டு மகிழ்ச்சி அளிக்கும்.

**மீனம்** பணியிட வளர்ச்சிக்காக நீங்கள் எடுத்த முயற்சிகள் வெற்றி தரும். நீண்ட நாளாக நீங்கள் எதிர்பார்த்த சுபச்செலவு வரும். பணியாளர்கள் கடமைகளைக் கருத்துடன் செய்தால் நன்மை வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா

# பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு இரவோடிரவாக இடமாற்றம்!

### அவரது விடுதிக்கு பலத்த பாதுகாப்பு

வவுனியா, ஜன. 6
வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் இரவோடு இரவாக திடீர் இடமாற்றம் வழங்கப் பட்டுள்ள நிலையில், அவரது விடுதிப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யாக 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் அவர் பணியாற்றிவந்த 'பீ.பீ.மானவடு'வுக்கே உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தேவைகருதிய அவசர இடமாற்றமாக குறித்த இடமாற்றம் இரவோடு இரவாக வழங்கப்பட்டுள் ளது. அதனடிப்படையில் கொஸ்வத்த பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக அவர் இடமாற் றப்பட்டுள்ளார். அவர் இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில், அவரது விடுதி முன்பாக இரவு இனந் தெரியாத நபர்கள் பட்டாசுகள் கொளுத்தியுள்ள னர். இதனையடுத்தே அவரது விடுதிக்கு பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரி விக்கப்பட்டது. (து-110,18)



சின்னையா இரத்தினம் ஞாபகார்த்த மாக அவரது குடும்பத்தால், கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயத்தில் கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட் டன. (ஒ-ரி1,9)

**இரசாயனவியல் (Chemistry)**
பிரபல பாடசாலையின் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியரால் தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலத்தில் தனி அல்லது குழு வகுப்புக்களின் புதிய பிரிவு ஆரம்பம்.
தொடர்புகளுக்கு : 076 778 1442
அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி

லிங்கம்ஸ் சில்க் கவுஸ் மற்றும் சோதி ரெக்ஸ் உரிமையாளரும்,
எமது கழக நிர்வாக சபை உருப்பினருமான
**கஜன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

### கணபதிப்பிள்ளை செல்லத்துரை

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தி னருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


**இல.165, மானிப்பாய் வீதி,
யாழப்பாணம்.**

**யாழ் வணிகர் கழகம்**

(CR 36976)1-6

## மரண அறிவித்தல்

தோற்றம்
05
12
1919



மறைவு
05
01
2022

### சரவணமுத்து வேலுப்பிள்ளை (மூளாயப்பு)

மூளாயைப் பிறப்பிடமாகவும் கொல்லன்கலட்டியை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து வேலுப்பிள்ளை அவர்கள் நேற்று (05.01.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து கதிராசிப்பிள்ளையின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், முருகேசபிள்ளை, சரவணபவானந்தமூர்த்தி, தில்லைநாதன் (சுவிஸ்), காலஞ்சென்ற கதிரிதம்பி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விஜயகுமாரி (ஆசிரிய வாண்மை விருத்தி மத்திய நிலைய முகாமையாளர், மானிப்பாய்), கமலவேணி (ஆசிரியர், உரும்பிராய் சைவத் தமிழ் ) கிரிசா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், துவிஜனன், துவாரகா, அஸ்வினி, துவானந், கபிசனா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.01.2022) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் 8ஆம் கட்டை துர்க்காபுரம், தெல்லிப்பழை இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் கீரிமலை செம்பொன்வாய்க்கால் மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முருகேசபிள்ளை,
8ம் கட்டை ஒழுங்கை,
துர்க்காபுரம், மல்லாகம்
தெல்லிப்பழை.**

**தகவல்
குடும்பத்தினர்
0776016145**

## 28 ஆம் ஆண்டு நினைவலைகள்

வருடங்கள் பல சென்றாலும்
உங்கள் நினைவுகளுடன் என்றும் குடும்பத்தினர்

மண்ணில்
22
08
1937



விண்ணில்
06
01
1994

### அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்

(முன்னாள் தலைவர், சாவகச்சேரி கைத்தொழில், வணிகர் மன்றம்
முன்னாள் உரிமையாளர், அம்பிகா பார்மசி, சாவகச்சேரி.)

எங்கள் குடும்பத்தலைவரே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எங்கள் குலதெய்வம் நுணுவில்
சிதம்பர விநாயகரை வணங்குகின்றோம்.
ஓம் சாந்தி !

சரசாலை வடக்கு, சாவகச்சேரி
நினைவுகளுடன் : குடும்பத்தினர்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 09.12.2021 வியாழக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
### சின்னக்குட்டி கந்தசாமி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.01.2022) வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் வேலணை சாட்டி புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 08.01. 2022 சனிக்கிழமை பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருவள்ளுவர் வீதி, 01ஆம் ஒழுங்கை,
06ஆம் வட்டாரம், வேலணை மேற்கு.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திரு. இராமச்சந்திரன் றவீந்திரன்

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் தற்போது பெல்ஜியத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.இராமச்சந்திரன் றவீந்திரன் அவர்கள் (01.01.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஆனைக்கோட்டையை சேர்ந்த இராமச்சந்திரன் - புஸ்பதேவி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், கெங்காதரன் (டென்மார்க்), ஆனந்தராசா (கனடா), செல்வச் சந்திரன் (லண்டன்), திருச்செல்வம் (பெல்ஜியம்), சத்தியசீலன் (லண்டன்) வரதவ ராஜன் (லண்டன்), சாந்தி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

39, சம்மந்தப்பிள்ளையார்
கோவில் வீதி,
ஆனைக்கோட்டை வடக்கு,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.
(திருமதி.மோ.சாந்தி அக்கா)
021 225 6580

(CS 955)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஏழாலை தெற்கு களபாவோடை வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்

## வருடாந்த மஹோற்சவம் - 2022

| | | |
|---|---|---|
| • கொடியேற்றம் | - | 08.01.2022 சனிக்கிழமை காலை 8.00 |
| • வேட்டைத்திருவிழா | - | 14.01.2022 வெள்ளிக்கிழமை காலை 8.00 |
| • சப்பரத்திருவிழா | - | 15.01.2022 சனிக்கிழமை காலை 8.00 |
| • தேர்த்திருவிழா | - | 16.01.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 |
| • தீர்த்தத்திருவிழா | - | 17.01.2022 திங்கட்கிழமை காலை 8.00 |

இம்முறை உற்சவங்கள் இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடனேயே இடம்பெறும். எனவே அடிய வர்கள் வீடுகளில் இருந்தவாறு ஓம் ரீவி வாயிலாக நேரலையாக கண்டுகளிக்க முடியும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அருள்மிகு வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்**

(cs.41916) (2.6)

## பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் உயிர்மாய்க்க முயற்சி

### மீட்கப்பட்டவர் மருத்துவமனையில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தி லுள்ள தற்காலிக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குடும்பத்தலைவர், அங்கு உயிர்மாய்க்கமுற்பட்டுள்ளார் என்று பொலிஸ் தரப்புத் தெரிவித்தது. அதனால் அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம் பெற்றது.

குறித்த பொலிஸ் பிரிவைச் சேர்ந்த அந்தக் குடும்பத் தலைவர், அவரது வீட்டில் குழப்பத்தில் ஈடுபட்டார் என்ற குற் றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, தடுத்துவைக்கப் பட்டிருந்தநிலை யிலேயே உயிர் மாய்க்க முற்பட்டார் என்று தெரிவிக்கப் பட்டது. பொலிஸார் விசாரணை மேற் கொண்டுள்ளனர்.

(த-26)

## காணி விற்பனைக்கு

சங்கானை சிவன் கோவில் சுற்றாடலில் அமைந்துள்ள ஆலய நிர்வாகத்திற்கு உட்பட்ட காணி விற்பனைக்குண்டு.

(cr.36971) (2.6)

**077 616 6159**

## வாகனம் விற்பனைக்கு

- மிகவும் நல்ல நிலையில் உள்ள one owner Toyota Lite ACE CM 35,58 - XXXX ரக வாகனம் விற்பனைக்கு உண்டு.
- Honda Activa one owner மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

(தரகர் தேவையில்லை)

(cs. 42051) (2.6)

**070 186 4077, 076 855 4077**

## யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் அங்கத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான மீண்டுமொரு சந்தர்ப்பம்

மேற்படி எமது சங்கத்தின் யாப்பு விதிகளுக்கு மாறாக செயற்பட்டு சங்கத்துடன் தொடர்பற்றிருக்கும் பேக்கரி உரிமையாளர்கள் தம்மை சங்கத்துடன் இணைப்பதற்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. 15/01/2022 இற்கு முன்னர் தம்மை அங்கத்தவராக பதிந்து இணைந்து கொள்ளுமாறும் தவறின். மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்பதையும் மேற்படி சங்கத்தின் பொதுச் சபை சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன்

**முக்கிய குறிப்பு:**
மற்றொரு சங்கத்தில் அங்கத்தவராக இருப்பின் குறித்த சங்கத்தில் இருந்து விலகியமைக்கான உறுதிப்படுத்தலு டன் மட்டுமே எம்முடன் தொடர்பு கொள்ள முடியும்.

**செயலாளர்**
**கா. பாஸ்கரன்**

(cr.36972) 92.6)

# மணிவிழா வாழ்த்து

## (01.01.2022)

## செல்வி கந்தையா இராஜேஸ்வரி

## (BA, MA, PGDE)

## யா/ நடேஸ்வராக் கல்லூரி




புங்கைநகர் பெற்றெடுத்த புனிதவதி - இவள்
புன்னகையோடு புது முகங்களாய் இணைந்தோம் பல்கலையில்
பூரிப்புடன் வாழ்ந்த கால நினைவே மனதில்

பட்டங்கள் பலபெற்று பாங்குடன் ஒன்றாய்
பாடித்திரிந்தோம் இணைந்தோம் பட்டப்பின் கல்வி தனில்
கல்விச் சேவை தனை இங்கிதமாய் நீங்கள் தொடர
கடல் கடந்து சென்றோம் நாங்கள் வெளிநாடு தனில்

அறிவைப் பெருக்கும் ஆசானாக அகிலத்தை வென்றிடும்
மாணவரை உருவாக்கும் முயற்சி தனில் முனைப்போடு தொடர்ந்து
வெற்றிநடை போட்டு வீறு கொண்டெழுந்த ஆசானே
கல்விச் சமூகத்திற்கு உரமூட்டியவளே!

அகவை அறுபதில் இளைப்பாறியதைப் பாராட்டி
அகமகிழ்ந்து மனமார வாழ்த்துகின்றோம்
ஓய்வு காலத்தில் பேரும் புகழும் கொண்டு
நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ

புதுமை மிகு புங்குடுதீவு பிள்ளையார் துர்க்கையம்மன்
நலம் பல செய்யும் நயினை நாகபூஷணி அம்மன்
சுன்னாகத்து கதிரமலை சிவன் அருள் பெற்று
பல்லாண்டு காலம் வாழ பக்குவமாய் வாழ்த்துகின்றோம்.




**வாழ்த்துவோர்: நாகநந்தினி குடும்பத்தினர்**
**குகப்பிரியா குடும்பத்தினர்**
**(கல்வி டிப்ளோமா) கனடா வாழ் நயினாதீவு நண்பிகள்**

(cs.42049) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## செல்வி சுதர்சனா (சஜி) கதிரமலை

(Project Consultant)
(Former Staff of World Vision, Greenteck. Pvt. Ltd)

அம்பனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சுதர்சனா (சஜி) கதிரமலை கடந்த (01.01.2022) அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரமலை - அன்னப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், Dr. இராஜசேகரன் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சுமதி (லண்டன்), சுகந்தி (லண்டன்), சுகுணா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr. திருமகள் (பிரதேச வைத்தியசாலை, கோப்பாய்), திலகேந்திரன் (லண்டன்), சற்குணம் (லண்டன்), உதயகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், தாட்சாயினி (மருத்துவ பீட 3 ஆம் வருட மாணவி), பிரகலாதன், கேதாரணி ஆகியோரின் அன்பு மாமியாரும், பாகுலன் (லண்டன்), பாரிதன் (லண்டன்), கஸ்தூரி (லண்டன்) ஆகியோரின் அன்பு சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.01.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் சகோதரர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**06, இராணி வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
Dr. **இராஜசேகரன் (சகோதரர்)**
**077 716 7929, 077 794 9770**

(cs 42047) (2.6)

# மரண அறிவித்தல்

**பிறப்பு** 14 . 01 . 1952



**இறப்பு** 03 . 01 . 2022

## தம்பு திரவியம்

முள்ளியவளை 3 ஆம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கல்வியங் காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு திரவியம் கடந்த (03.01.2022) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - அம்மாக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - முத்துமணி தம்பதியரின் அன்பு மருமகனும், உதயலோசினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, புலேந்திரம், இராசதுரை, கந்தசாமி, ஈஸ்வரபாதம் மற்றும் பரமேஸ்வரி (கனடா), இரத்தினம்மா, சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிவேந்தன் (பரணிகா மல்ரி சொப், கல்வியங்காடு), தாரணி (அபிவிருத்தி உத்தியோகத்தர், தொல்லியல் திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தரூபன் (ஸ்ரீமுருகன் பாமசி, கல்வியங்காடு), வாரணி (ஆயுள் வேத வைத்தியர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கபினேகா, வருணிகா, தரங்கினி, பரணிகா, அஸ்விதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புலவனார் வீதி, கல்வியங்காட்டில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் **இன்று (06.01.2022) வியாழக்கிழமை** 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மகன் : 076 880 7435**
**மகள் : 077 877 8601**

(cs 42048) (3.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

**அன்னை மடியில்** 11 . 10 . 1956



**ஆண்டவன் மடியில்** 27 . 12 . 2021

## திருமதி ரதி சிறீஸ்கந்தராசா

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி பேர்லினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரதி சிறீஸ்கந்தராசா கடந்த (27.12.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தில்லைநாயகி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான யோகராசா - கெங்காம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகளும், சிறீஸ்கந்தராசாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற கலாவின் அன்புச் சகோதரியும் மற்றும் சக்தி, சுரேன், மதி, கணேசன், குட்டி, சிவா, கஜேன், நாதன், துஷி, ஜனா ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் **இன்று (06.01.2022) வியாழக் கிழமை** ஜேர்மனி பேர்லினில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தும்பளை வீதி,**
**சிவன்கோயிலடி,**
**பருத்தித்துறை.**

**தகவல்:**
**கணேஸ், சிவா**

(cs 928) (2.6)

# மரண அறிவித்தல்

**மண் மகிழ** 07 . 01 . 1963



**கண் நெகிழ** 04 . 01 . 2022

## உயர்திரு. சிதம்பரம் சிவபாலன்

**றெயின்போ கிராபிக்ஸ் (PVT) LTD, அஸ்ரா Printers (PVT) LTD**
**ஸ்தாபகரும் உரிமையாளரும்,**
**முன்னாள் திருகோணமலை வர்த்தக சங்கத் தலைவரும் (2010-2011),**
**முன்னாள் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா Galaxy Photo Service உரிமையாளரும்,**
**யாழ்கிளை Europe பல்கலைக்கழக இணை இயக்குனரும்**

யாழ் வடமராட்சி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், இராமநாதபுரம் கிளிநொச்சி, திருகோணமலை, தற்போது யாழ்ப்பாணம் நல்லூர் குறுக்குத்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு. சிதம்பரம் சிவபாலன் அவர்கள் (04.01.2022) செவ்வாய்க்கிழமை அன்று அதிகாலை 1.00(A.M) மணியளவில் இறைவன் பாதம் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.பெ.சிதம்பரம், திருமதி அ.சிதம்பரம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், செல்வி.வ.பார்வதியின் அன்புப் பெறா மகனும், காலஞ்சென்றவர்களான திரு.பா.யோக ராஜா, திருமதி யோ.கலாரூபவதி ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதி சி.யோககுமாரியின் (சுமதி - ஆசிரியர்) அன்புக் கணவரும், விஷ்ணிகாவின் பாசமிகு தந்தையும், சி.சிவயோகம், சி.சிவகுமார் (சட்டத்தரணி-இலண்டன்), சி.சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அகல்யாவின் அன்புச் சித்தப்பாவும், சி.சிவலோகநாதன், சி.பாலாம்பிகை, கா.சிவானந்தராசா, சசிகலா பாஸ்கரன், சக்தி விக்னேஸ்வரன், சிவரூபன் பகீரதா ஆகியோரின் அன்பு மைத்துனரும், தீபிகா, தர்சிகா, கீர்த்தனா, விவேகா, சாயிகா ஆகியோரின் பெரியப்பாவும், விஜிந்தன், காலஞ்சென்ற ஹரினி, ஐஸ்வர்யா, ஆரித்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இல.61/6 குறுக்குத்தெரு நல்லூரில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் அன்னாரின் பூதவுடல் 2022.01.05ஆம் திகதி பி.ப 2.00 மணிமுதல் 2022.01.06 ஆம் திகதி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (06.01.2022) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, மாலை 4.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 42056) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவாலை
வருத்தப்படாத
வாலிபர் சங்கம்
பட்டத்திருவிழா

ஜனவரி 14 2022
காலை 9மணி முதல்
காங்கேசன்துறை வெளிச்சவீட்டு அருகே...

1ம் பரிசு ரூபா 25,000.00
2ம் பரிசு ரூபா 20,000.00
3ம் பரிசு ரூபா 15,000.00
மேலும் 3 ஆறுதல் பரிசுகள்



ஜனவரி 08 2022
காலை 7 மணி
ஆரம்ப இடம்: இளவாலை சந்தி

1ம் பரிசு ரூபா 10,000.00
2ம் பரிசு ரூபா 5,000.00
3ம் பரிசு ரூபா 3,000.00

சைக்கிள் ஓட்டம்



மரதன் ஓட்டம்
ஆரம்ப இடம்: சித்திரமேழிச் சந்தி
ஜனவரி 09 2022
காலை 6 மணி

1ம் பரிசு ரூபா 7,500.00
2ம் பரிசு ரூபா 5,000.00
3ம் பரிசு ரூபா 3,000.00

ஏனைய பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்வுகள்
பொங்கல் தினத்தன்று மாலை 3.30 மணி முதல் இளவாலையில்...
தொடர்புகளுக்கு: 0775417659, 0776087318

விளம்பர அனுசரணை: கிருபா லேணர்ஸ், 0777 22 52 92


# கண்ணீர் அஞ்சலி

## கணபதிப்பிள்ளை செல்லத்துரை

உரிமையாளர் : சோதி புடைவையகம் - யாழ்ப்பாணம், விஸ்னு ஹாட்வெயார் - புத்தூர்
விஸ்னு ஹாட்வெயார் - புன்னாலைக்கட்டுவன்



**தோற்றம்** 20.03.1944 **மறைவு** 05.01.2022

காற்றிலே வந்த செய்தி கானலாகிப் போகாதா
என கலங்கி துடித்தபடி கதறுகின்றோம்
வாழ்விற்கு இலக்கணம் வகுத்து வாழ்வாங்கு
வாழ்ந்தவரே வானுறையும் நீங்கள்
தெய்வத்தில் வைக்கப்பட
இறைவனை வேண்டுகிறோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக்
கொள்கின்றோம்.

வாணி ரெக்ஸ்
யாழ்ப்பாணம் / சாவகச்சேரி.

S.மணிவர்ணன்
குடும்பத்தினர்.

(CR 36975) 1-6

# மரண அறிவித்தல்

## இளையதம்பி திருமேனி

(ஓய்வுநிலை செயலாளர், வவுனியா தெற்கு, பிரதேச சபை)



புலோலியைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி திருமேனி (ஓய்வுநிலை செயலாளர், வவுனியா தெற்கு பிரதேச சபை), அவர்கள் நேற்று (05.01.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி இலட்சுமியின் அன்பு மகனும், யோகேஸ்வரியின் கணவரும், வைரமுத்து சின்னத்துரை, செல்லம்மா தருமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2022) வியாழக்கிழமை நண்பகல் 11.00 மணிக்கு மீசாலையில் நடைபெற்று, தகனக் கிரியை வேம்பிராய் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

(CR 36975) 1-6

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 . 12 . 1942
மறைவு 28 . 12 . 2011

அமரர்
## செல்லர் குணபாலசிங்கம் (குணம்)
திதி - 06.01.2022

நேசத்துடனும் பாசத்துடனும்
எமை வளர்த்து
நேர்வழியில் வாழ வைத்து
இதயக் கனவுகளை அகிலத்தில்
நிறைவேற்றிய எங்கள்
அன்புத் தெய்வத்தை
எம் உள்ளங்களில் இருத்தி
எந்நாளும் வணங்குகின்றோம்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்

# 43 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 17 . 06 . 1924
மறைவு 25 . 11 . 2021

நல்ல போராட்டத்தை போராடினேன்
ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தை
காத்துக்கொண்டேன்
11 தீமோத்தேயு 4 : 7

கடந்த 25.11.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த
அமரர்
## யோசேப் செல்லத்துரை இராஜரட்ணம்

அவர்களின் 43 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி செலுத்தும் வழிபாடும் அதனைத் தொடர்ந்து மதிய போசனமும் இன்று (06.01.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் மறைவுச்செய்தி அறிந்து ஆறுதல் கூறியவர்கள் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்கள், தொலைபேசி மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகள், மலர்வளையங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், முன் நின்று சரீர உதவி புரிந்தவர்கள், திருச்சபை மக்கள், அடக்க ஆராதனையை நடத்திய திருச்சபை ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

"பெத்தனி"
கடற்கரை வீதி, பருத்தித்துறை.

பிள்ளைகள்.

(cr.36973) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தியாவிடமிருந்து 500 பஸ்கள்

கொழும்பு, ஜன. 6

இந்தியாவிலிருந்து 500 பஸ்களை இறக்குமதிசெய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தியாவின் கடனுதவித் திட்டத்தின்கீழ் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு 32 தொடக்கம் 35 ஆசனங்கள் கொண்ட 500 பஸ்களை கொள்வனவு செய்வதற்காக 2020 ஜனவரி மாதம் 08 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்துள் ளது.

அதற்கமைய, பஸ்களைக் கொள்வனவு செய்வதற்காக முற்கூட்டிய தகைமைகளைக் கொண்ட 3 நிறுவனங்களிடமிருந்து போட்டி விலைமுறிகள் கோரப்பட்டுள்ளன.

குறித்த விலைமுறிகளின் மதிப்பாய்வின் பின்னர் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய 32 ஆசனங்களைக் கொண்ட 500 பஸ்களைக் கொள்வனவு செய் வதற்காக இந்தியாவின் அசோக் லேலாண்ட் கம்பனிக்கு அனுமதி வழங்குவதற்குப் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (த-இ)

# மறியல் நீடிப்பு

முல்லைத்தீவு, ஜன. 6

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரும், வாலிபர் முன்னணிப் பொருளாளருமான பீற்றர் இளஞ்செழியனை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த மாதம் 31 ஆம் திகதி கைது செய்யப்பட்ட பீற்றர் இளஞ்செழியன் நேற்றுமுன்தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவர் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மீண்டும் முற்படுத்தப்பட்டார். இவர் மீதான வழக்கு விசாரணைகள் நிறைவடையாத நிலையில், எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ஓ-4,19)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஜன. 6

முல்லைத்தீவு, தண்டாய் வடக்கு கிராமத்தில், சட்ட விரோதமாக நாட்டுத் துப்பாக்கியை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். (ஓ-4,19)

# தைப்பொங்கல் அறக்கொடை

யாழ்ப்பாணம், ஜன. 6

'தாயகம்' அறக்கொடை நிறுவனம், தைப்பொங்கலையொட்டி 100 குடும்பங்களுக்கு பொங்கல்பானையுடனான பொதிகளையும், அங்கத்தவர்களின் கல்வி கற்கும் 100 சிறார்களுக்கு காலணிகளையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கியுள்ளது. (த-இ)


## துயர் பகிர்கின்றோம்

தோற்றம் 09 . 11 . 1946 — மறைவு 02 . 01 . 2022



அளவெட்டி மகாஜன சபை, சனசமூக நிலையம் ஆகியவற்றின் செயலாளர் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் தெல்லிப்பழை)
**திரு. ஐ. பிரகாஸ் அவர்களின் தந்தையார்**

**பொன்னையா இரத்தினம்**

அவர்கள் 02.01.2022 இல் காலஞ்சென்றமை குறித்து எங்கள் அளவெட்டி மகாஜன சபையினர் துயர் பகிர்வதுடன் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு சபையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**அளவெட்டி மகாஜன சபை நிர்வாகத்தினர்.**

(CS 959) 1-6

## மரண அறிவித்தல்



**இளையதம்பி மனோன்மணி**

இருபாலையை பிறப்பிடமாகவும் குளுக்கண்டி வீதி, கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான திருமதி இளையதம்பி மனோன்மணி அவர்கள் கடந்த 03.01.2022 கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் இளையதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (பொலிஸ்மணியத்தின்) பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்பு மைத்துனியும், ஜெகதீஸ்வரி (ஜேர்மனி) ரவீந்திரகுமாரன் (லண்டன்), சிவநேசராசா (கனடா) மனோரஞ்சிதராசா (ஜேர்மனி), சத்தியசீலன் (பிரான்ஸ்) புஸ்பலோசினி (கனடா) பூலோகறஞ்சிதம் (பிரான்ஸ்) நடராஜா (கனடா) சுரேஸ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜியகுமார் (ஜேர்மனி) சந்திரகுமாரி (லண்டன்), றயனி (கனடா), ஞானதிலகராணி (ஜேர்மனி), சாந்தி (பிரான்ஸ்), சரவணபவன் (கனடா), கருணாகரன் (பிரான்ஸ்), உதயமாலினி (கனடா) பத்மரூபி (ஜேர்மனி) மற்றும் பரமானந்தன் (ஜேர்மனி) காலஞ்சென்ற செல்வராணி, நித்தியானந்தன் மற்றும் விஜியராணி (இருபாலை) சிவானந்தன் (இத்தாலி) கிருபானந்தன் (நாவற்குழி) விவேகானந்தன் (இருபாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், புருசோத், காலஞ்சென்ற கௌசிகா மற்றும் தரணியன், ரிஷ்யன், தர்சிகா, நிரோஜன், நிலக்சன், கிரிசாந், ஜெயசாந், ராஜசாந், அதுர்சா, அஜந்தா, சுகன்யா, கௌரிசங்கர், தர்சன், வித்தியா, சுஜீதன், நிதுஷன், சௌமியா, சஜீர்த்தன், மதுசன், விதுஷன், நிவாயன், அற்சுதன் ஆகியோர்களது அன்புப் பேர்த்தியும், அஸ்மிதா, கிறிசா, ஜியாசிறி, சகிரா, சயனா ஆதியா, சங்கர், சக்தி, அருச்சுனன், அஞ்சலி, ஜெயசாந், ஜெய்லன், றிசோத், வினோத், பவிசா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.01.2022 ஞாயிற்றுக்கிழமை மு.ப.7.00 மணிக்கு கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

V.H. லேன், இருபாலை.

தகவல்: மருமக்கள் பொலிஸ் மணியம் குடும்பத்தினர்.

(CS 956) 1/6

## 28 ஆம் ஆண்டு நினைவலைகள்

வருடங்கள் பல சென்றாலும் உங்கள் நினைவுகளுடன் என்றும் வணிகர்கள்

மண்ணில் 22 . 08 . 1937 — விண்ணில் 06 . 01 . 1994



**அமரர் சங்க்ரப்பிள்ளை நமசிவாயம்**

(முன்னாள் தலைவர், சாவகச்சேரி கைத்தொழில், வணிகர் மன்றம் முன்னாள் உரிமையாளர், அம்பிகா பார்மசி, சாவகச்சேரி.

மன்றச் சேவைக்கென வந்து அமரத்துவமடைந்த அமரரின் நினைவு நாளும் நினைவுக்கூட்டமும் இன்று (06.01.2022) வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு மன்ற அலுவலகத்தில் உள்ள அமரரின் நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டிக் கொள்கின்றோம் (ct.36964) (2.6)

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

## மரண அறிவித்தல்

மலர்வு 24 06 1936 — உதிர்வு 05 01 2022



**அமரர்.மகாலட்சுமி சச்சிதானந்தன்**

காலஞ்சென்ற நவாலியூர் நாகலிங்கம் சச்சிதானந்தனின் மனைவி மகாலட்சுமி சச்சிதானந்தன் நேற்று புதன்கிழமை (05.01.2022) அதிகாலை இயற்கை எய்திவிட்டார்.

இவர், காலஞ்சென்ற துரையப்பா காராளசிங்கம் (தபால் அதிபர் -பலாங்கொடை, இரத்தினபுரி) தெய்வானையம்மா தம்பதியின் மூத்த மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி நாகலிங்கம், ஆச்சிமுத்து தம்பதியின் மருமகளும், பிரேமவர்தன, பிரியதர்ஷினி, காலஞ்சென்ற பிரதாபன், பிரேமரூபன் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஷீலா, குமார், சாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்ஷ்மி, அருந்திகா, டிலுஷா, அஷ்விகா, ஹிரான், சேஷன், ரக்தி ஆகியோரின் பாட்டியுமாவார்.

**அன்னாரின் பூதவுடல் இன்று காலை ஒன்பது மணிமுதல் பொரளை ஜெயரட்ண மலர்சாலையில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரிகைகளின் பின்னர் மாலை 4.45 மணியளவில் கனத்தை மயானம் இந்து பிரிவில் தகனம் செய்யப்படும்.**

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: பிரேமரூபன் (மகன்) - 077 355 8888**

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 03 1940 — மறைவு 05 01 2022



**கந்தசாமி மனோன்மணி**

அராலி தெற்கை பிறப்பிடமாகவும், அராலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி மனோன்மணி அவர்கள் நேற்று (05-01-2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சிதம்பரம் தம்பதியரின் மருமகளும் அமரர் கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும் கோபாலசிங்கம், ராணி, சாரதா, நிர்மலகுமார், றாதா, லதா, தயா ஆகியோரின் பாசமிகு தாயாரும் தேவராணி, அமரர் சபாநாதன், அமரர்.இந்திரராசா, விமலேஸ்வரி, ஸ்ரீகாந்தன், முருந்தகுமார், மயூரன் ஆகியோரின் மாமியாரும் சிவயோகம், பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான முத்துமாரி, அன்னம்மா மற்றும் பவளம்மா ஆகியோரின் சகோதரியும் அமரர். கனகம்மாவின் மைத்துனியும் நிறஞ்சன், சுபா, தினேஸ், தீபா, தாரா, றஞ்சி, சுசி, அனுசா, ஹரிறாம், விஸ்ணுஜா, அபிசனா, கோபிசன், வர்ணா, சோபியா, நிலக்ஷியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சொப்னா, பிரவீன் , ஸ்வேதா, சாரங்கா, பிரஜித், அபிராஜ், அஸ்வினி, அஜீஷ்,ஹரிஸ், திவீஸ், அட்ஷரா, யுகிஷரன், கபிஷரா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2022) வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் மகன் (கோபாலசிங்கம்) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

தகவல்
க.கோபாலசிங்கம் (மகன்)
T.P : 0777111121


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூடான்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்த நாட்டிலுள்ள பிரதான இரு கட்சிகள் எனக்கூறிக்கொள்ளும் தரப்புக்களுடன் இணைந்து முன்னோக்கிப் பயணிக்க முடியுமா? முடியாது. மக்களுக்காக மக்கள் ஆட்சி மலரவேண்டும். அதற்காகவே நாம் உங்களை நாடி ஊருக்கே வந்துள்ளோம். மக்களின் எதிர்காலத்தை மேம்படுத்தக்கூடிய ஆட்சியொன்றை அமைக்காமல் எங்களால் முன்னோக்கிச் செல்லமுடியாது.

எப்படிப் புதிய ஆட்சி அமைப்பது என மக்கள் கேட்கலாம். அதிகாரம் எவரிடம் இருக்கின்றது? உண்மையாகவே ஆட்சியமைப்பதற்கான 'அதிகாரம்' மக்களிடமே இருக்கின்றது. அந்த அதிகாரத்தைத்தான் 'புள்ளடி' மூலம் 5 ஆண்டுகளுக்கு மக்களே தற்காலிகமாக கைமாற்றுகின்றனர். அதனால்தான் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் வருகின்றது.

ஆக அதிகாரம் என்பது மக்கள் வசம் தான் உள்ளது.

தற்போது என்ன செய்யவேண்டும்? சரியான தரப்புக்கு அந்த அதிகாரத்தை ஐந்து வருடங்களுக்கு கைமாற்றுங்கள். இந்த மாற்றத்தை ஏற்படுத்த இன்னும் மூன்றாண்டுகள் காத்திருக்க வேண்டும். ஏனெனில், நீங்கள் ஐந்தாண்டுகளுக்கு அதிகாரத்தை ஒரு தரப்புக்கு கைமாற்றிவிட்டீர்கள். ஆனால், மாற்று வழியும் இருக்கின்றது.

மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடியதால் சூடான் பிரதமர் பதவிவிலகிச் சென்றுவிட்டார். ஐந்தாண்டுகளுக்குத்தான் அவரும் பதவிக்கு வந்திருப்பார். ஆனால், மக்கள் வீதிக்கு இறங்கியதால் முன்கூட்டியே செல்லவேண்டி ஏற்பட்டது. இங்குள்ளவர்களையும் முன்கூட்டியே வீட்டுக்கு அனுப்பவேண்டுமென்றால், பொதுமக்கள் வீதிக்கு வரவேண்டும். மக்கள் தயாரென்றால், நாமும் தயார். அவ்வாறுதான் நடக்க வேண்டும். அது ஜனநாயக விரோதச் செயலாகவும் அமையாது.

மக்களால் உருவாக்கப்படும் அரசு, மக்களுக்கு நெருக்கடி கொடுக்கின்ற, மக்களின் உரிமைகளை மறுக்கின்ற, மக்களுக்கு எந்தநேரமும் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்ற, பொருள்களின் விலைகளை அதிகரிக்கின்ற , நாட்டு வளங்களை விற்கின்ற, அந்த ஆட்சிக்கு எதிராக வீதியில் இறங்குவதற்கான உரிமை மக்களுக்கு இருக்கின்றது" - என்றார். (த-ம-44)

## மலேரியாவைப்...

வகை நுளம்பு யாழ்ப்பாண நகரப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை மிகவும் அபாயகரமானது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். நகரில் அடையாளம் காணப்பட்டுள்ள குறித்த நுளம்பு மூலமாக எமது பகுதியிலும் மலேரியா பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகிறன. மலேரியாவை பரப்பக்கூடிய நுளம்புகள் எங்களுடைய பிரதேசங்களில் தாராளமாகவுள்ளன.

எனவே, வெளிநாட்டிலிருந்து ஒருவர் மலேரியாத் தொற்றுடன் இங்கு வந்தால், உள்ளூரில் இந்தநோய் பரவக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. இந்தச் சூழ்நிலையில், எவ்வாறு மலேரியாவைக் கட்டுப்படுத்தலாம் என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். குறிப்பாக, மலேரியா உள்ள நாடுகளுக்குச் செல்வோர் இந்த விடயம் தொடர்பில் அவதானமாகச் செயற்பட வேண்டும் - என்றார். (த-27)

## புலனாய்வுத்...

கப்பட்டுள்ளார்." என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களால் கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சந்தையில் வைத்து அரசை விமர்சித்ததாலேயே சுசில் பிரேமஜயந்த நீக்கப்பட்டாரென பலரும் கருத்து வெளியிடுகின்றனர். இது மட்டும் காரணம் அல்ல. இந்தநாட்டில், அரச புலனாய்வுப் பிரிவு இருக்கின்றது. அந்தப் பிரிவு அரசு சம்பந்தமாகவோ, தேசிய பாதுகாப்பு சம்பந்தமாகவோ, மாற்று அரசு தொடர்பானதாகவோ, அரசியல் நிலைவரம் தொடர்பானதாகவோ தகவல்களை வழங்கும். சுசில் தொடர்பான தகவல்களையும் வழங்கும். அதேவேளை, மாற்று சக்தியொன்றை உருவாக்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் முயற்சித்து வருகின்றார். அதற்குத் தலைமை வழங்கவும் தயார் என குறிப்பிடுகின்றார். சுசில் பிரேம ஜயந்தவை பதவிநீக்கம் செய்தது தவறென்கின்றார். ஆனால் மைத்திரிதான் கூட்டுச்சதி செய்தவர்."- என்றார். (த-44)

## மஹிந்தவை...

கோத்தாபய ராஜபக்சவால் பறிக்கப்பட்டுள்ளது. ராஜபக்ச குடும்பத்துக்குள்ளேயே அதிகாரச் சமர் மூண்டுள்ளது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"அமைச்சரவையின் கூட்டுத் தலைமையை ஜனாதிபதியும், பிரதமரும் வகிக்கின்றனர். இந்தநிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் ஆலோசனையைப் பெறாமலேயே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும் அவரின் சகாக்களும் சுயமாக முடிவெடுத்து சுசில் பிரேமஜயந்தவின் இராஜாங்க அமைச்சுப் பதவியைப் பறித்தெடுத்துள்ளனர். இது இந்த அரசின் வீழ்ச்சிக்கான ஆரம்பமாகும். மஹிந்தவின் தீவிர விசுவாசியாகச் சுசில் இருக்கின்றார். அரசிலிருந்து மஹிந்தவை ஓரங்கட்டவே அவரின் சகாவான சுசிலின் இராஜாங்க அமைச்சுப் பதவி ஜனாதிபதியால் பறிக்கப்பட்டுள்ளது. ராஜபக்ச குடும்பத்துக்குள்ளேயே அதிகாரச் சமர் மூண்டுள்ளது. எனவே, ராஜபக்ச குடும்ப அரசு விரைவில் கவிழும் என்பது திண்ணம்" - என்றார் . (த-22)

## ஆரியகுளம்...

தும் பாணியில் -யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளருக்கு வடக்கு மாகாண ஆளுநர் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார். அவரது இந்தக் கடிதம், யாழ்.ஆரிய குளத்தை மத்திய அரசிடம் தாரைவார்க்கும் முயற்சியா? என மாநகர சபையினர் உட்பட பலரும் கேள்வியெழுப்பியுள்ளனர். வடக்கு ஆளுநர் யாழ்.மாநகர ஆணையாளருக்கு அனுப்பிய கடிதத்தின் சாராம்சப்படி,

யாழ். மாநகர முதல்வரின் ஏற்பாட்டில் தனியார் நிதிப் பங்களிப்புடன் ஆரியகுளம் அழகுபடுத்தப்பட்டு, பொழுதுபோக்குத் திடலாகப் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டிருந்தது. ஆரியகுளப் புனரமைப்புப் பணிகளின்போது, மதச் சின்னங்களை நிறுவுவதில் இழுபறிநிலை தோன்றியிருந்த நிலையில், எந்தவொரு மத அடையாளத்தையும் பிரதிபலிக்கும் விடயங்கள் ஆரிய குள சீரமைப்பில் இடம்பெற இடமளிப்பதில்லை என்று மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

எனினும், அரசமைப்பின்படி மத அனுட்டானங்களைத் தடுக்கும் அதிகாரம் சபைக்கு இல்லை என்று சுட்டிக் காட்டியிருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, ஆரியகுளம் மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்டதுதான் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் உரித்து ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறும் மாநகர ஆணையாளரைப் பணித்திருக்கிறார்.

மேலும், சமயத்தைப் பின்பற்றும் உரிமை தொடர்பில் மாநகர சபை உறுப்பினர்களுக்கு மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் தன்னைச் சந்தித்து ஆலோசனை பெறுமாறும் அந்தக் கடிதத்தில் ஆளுநர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆரிய குளத்தை, சீரமைப்பின் பின்னர் திறந்துவைக்கும் நிகழ்வில், வடக்கு ஆளுநர் நடந்துகொண்டவிதம் அன்றையதினமே பலருக்கும் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது. அதாவது, மாநகர சபையினர் யாழ்.நாக விகாராதிபதியை அழைத்திராதபோதும், ஆளுநர் தன்னிச்சையாக சிங்கள கலாசார பாணியில் ஆரியகுள திறப்பு நிகழ்வுக்கு விகாராதிபதியை அழைத்து வந்திருந்தார்.

இந்தநிலையிலேயே, தற்போது ஆரிய குள உரிமம் பற்றிக் கடிதம் மூலமாகக் கேள்வியெழுப்பியுள்ளார். (த-20,26)

## 'ரவுண்ட் அப்'....

நெற்செய்கையாளருடனான முற்பகை காரணமாக விஷமிகள் சிலர் இவ்வாறு நாசவேலையில் ஈடுபட்டிருக்கலாம் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம், கிளிநொச்சி கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட முரசுமோட்டை கோரக்கன் காட்டுப்பகுதி வயலில் இடம்பெற்றுள்ளது.

நெல் விதைக்கப்பட்டு சுமார் 50 நாள்களாகி, பயிர்கள் வளர்ந்து கதிர் தள்ளியநிலையில், களைகொல்லியை விசிறியதன் மூலம் அவை திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் முறையிடப்பட்டதற்கமைய, விவசாயப் போதனாசிரியர் அவற்றைப் பார்வையிட்டு, கிருமிநாசினி விசிறப்பட்டதை உறுதிசெய்துள்ளார். அத்துடன், சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ரவுண்ட் -அப் மருந்தை விசிறினார் என்று குற்றஞ்சாட்டப்படும் சந்தேகநபரை, பொலிஸ் நிலையத்துக்கு வருமாறும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார். (த-113)

## பகிடிவதையில்...

வரை விசாரணைகள் நிறைவடையும் வரை பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பகுதிக்கும் உள்நுழைய முடியாதபடி தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறித்த மாணவன் பல்கலைக்கழக விடுதியிலிருந்து உடனடியாக வெளியேறவேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது. விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இன சிரேஷ்ட மாணவன் ஒருவர்மீதே விஞ்ஞான பீடாதிபதியால் இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்படும் மாணவன், நேற்று புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில், புதுமுக மாணவர்களைப் பகிடிவதைக்கு உள்ளாக்கினார் என்றும் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தினார் என்றும் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர் நலச் சேவை அதிகாரிகளின் கவனத்துக்கு பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் கொண்டுசென்றிருந்தனர். அதனையடுத்து, விசாரணைகள் நிறைவடையும்வரை குறித்த மாணவனுக்கு நுழைவுத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று விஞ்ஞானபீட பீடாதிபதி அறிவித்துள்ளார். (த-26)

## பனை...

ஆனால், கடந்த 3 வருடங்களுக்கு முன்னர், தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள சகோதரரான கிருஷாந்த பத்திராஜா நியமிக்கப்பட்டதிலிருந்து, அவர் மிக அதிகளவான ஊழல் மோசடியில் ஈடுபட்டுவருகின்றார் என்பது அதே சபையின் உள்ளகக் கணக்காய்வில் தெரியவந்துள்ளது. அதனையடுத்து, கிருஷாந்த பத்திராஜாவுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கைத் தாக்கல் செய்துள்ள சட்டத்தரணி எஸ்.செலஸ்ரின் இந்த விடயத்தை, நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிருஷாந்த பத்திராஜா, மக்களுடைய பணத்தை திருடினார் என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்களை அந்தப் பனை அபிவிருத்திச்சபையினுடைய உள்ளகக் கணக்காளர் சிவராஜா, பதில் பொது முகாமையாளர், மற்றோர் உள்ளகக் கணக்காளர் ரமேஸ்வரன், கணக்காய்வு அலுவலர் நவநந்தன் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

அதன்படி, கிரிஷாந்த பத்திரராஜா மக்களுடைய சுமார் 25 மில்லியன் தொடக்கம் 50 மில்லியன் ரூபா வரையான பணத்தை மோசடியாகப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பான கணக்காய்வு அறிக்கைகள் உட்பட்ட பல அறிக்கைகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. அவை மிகப்பத்திரமாகவும் இரகசியமாகவும் உள்ளகக் கணக்காய்வாளர் சிவராஜாவின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணத் தலைமையகத்தில் இருந்தன. அவற்றை, கிருஷாந்த பத்திராஜா கொழும்பிலிருந்து வந்து கணக்காய்வு அலுவலரைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்று அவருக்கு அடித்துள்ளார். அதன்பின்னர் யாழ்ப்பாணத் தலைமையகத்திலுள்ள ஆவணங்களை உடைத்து எடுத்துச் சென்றிருக்கின்றார்.

குறித்த அனைத்து ஆவணங்களையும் பத்திரமாக வைத்திருந்தவேளை, அவை வைக்கப்பட்டிருந்த ஆவண அலுமாரியை கிருஷாந்த பத்திராஜா உடைத்து எடுத்து அழித்திருக்கின்றார். இந்தநிலையிலேயே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது - என்றார். (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கைதடி கலைவாணி வித்தி யாலயத்தில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு, வடமாகாணத்திலுள்ள இலங்கை அதிபர் சேவை தரம் III ஐச் சேர்ந்த அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது வலயக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று முழுமைசெய்து எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு வல யக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (ஒ-ரி1,9)


**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்கு. தங்கியிருந்து வேலை பார்ப்பதற்கு வீட்டு பணிப்பெண் தேவை. 45 வயதிற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(cs.42050) (2.6) 077 996 3329

**A/L- வரலாறு**

தேசிய, மாவட்ட ரீதியில் உயர் பெறுபேறுகளுக்கு வித்திட்ட உங்கள் ஆசிரியர்

M. பத்மன் B.A (Hons) History, PG.D.E, M.A (History)

**கற்பிக்கும் இடங்கள்**

D. M. I ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

உயர் கலைக்கல்லூரி குளப்பிட்டி, கொக்குவில்.


BITSMANS மானிப்பாய்.

- 2023 பிரிவுக்கு புதிய பிரிவுகள் ஆரம்பம்
- 2022 புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன "வெற்றிக்காக இணைவோம்" (cs.946) (2.6)


# மரண அறிவித்தல்

**பிறப்பு**
20 . 03 . 1944

**இறப்பு**
05 . 01 . 2022



## திரு. கணபதிப்பிள்ளை செல்லத்துரை

**உரிமையாளர் - சோதி ரெக்ஸ்ரைல் - யாழ்ப்பாணம்**
**விஸ்ணு ஹாட்வெயார் - புன்னாலைக்கட்டுவன்**
**விஸ்ணு ஹாட்வெயார் - ஆவரங்கால்**

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கணபதிப்பிள்ளை செல்லத்துரை நேற்று (05.01.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், தங்கம்மா, இந்திராதேவி மற்றும் சரஸ்வதி, கமலாதேவி, அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நித்தியானந்தபவானி அவர்களின் அன்புக் கணவரும், தர்சினி (சுவிஸ்), கஜன், வேதகி, சுதர்சினி (கனடா), உமைபாலன், விஸ்ணுராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீகரன் (சுவிஸ்), குகநந்தி, முகுந்தன், இராஜகாந்தன் (கனடா), பிரபாலினி, தர்சிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், சரனியன், சாகித்தியா, காவியா, வைஸ்ணவன், கௌசிகன், தன்ஷிகா, அபிராம், ஆதன்யா, பவிரா, சபினாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவகுமார் மற்றும், பத்மாவதி, சச்சிதானந்தபவானி, சோமேஸ்வரி, சோமறஞ்சினி, வனிதா, விவேகானந்தன், ஆனந்தமோகன்தாஸ், தமயந்தி மற்றும் காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரன், மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2022) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

**ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.**

077 722 2308 - மகன்
077 255 2934 - மகன்
077 991 6589 - மகன்
077 759 4825 - மகள்

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.